بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 3

இதழ் 50

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

05 ரபீவுஸ் ஸானி 1440 ஹிஜ்ரி கமரி 13 ஃபதஹ் 1397 ஹிஜ்ரி ஷம்ஸி

13 டிசம்பர் 2018


## அல்லாஹ்வின் கட்டளை

رَبَّنَا وَلَا تُحَمِّلْنَا مَا لَا طَاقَةَ لَنَا بِهٖ

وَاعْفُ عَنَّا وَاغْفِرْ لَنَا وَارْحَمْنَا أَنْتَ

مَوْلٰىنَا فَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكٰفِرِيْنَ

எங்கள் இறைவா! எங்களுக்கு முன்னுள்ளவர்கள் மீது நீ பாரத்தைச் சுமத்தியது போன்று எங்கள் மீதும் நீ அதனைச் சுமத்தாதிருப்பாயாக. எங்கள் இறைவா! எங்களால் (சுமக்க) இயலாத (பாரத்)தை எங்கள் மீது சுமத்தாதிருப்பாயாக. எங்கள் (குற்றங்களை) மன்னிப்பாயாக. எங்களைப் பொறுத்தருளுள்வாயாக. எங்கள் மீது கருணை காட்டுவாயாக; நீயே எங்கள் எஜமானன்; ஆகவே நிராகரிக்கும் கூட்டத்தினர்க்கு எதிராக நீ எங்களுக்கு உதவி புரிவாயாக. (2:287)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறுகின்றார்கள்: நூஹ் நபியின் கப்பல் என்ற நூலில் நமது போதனைகள் அடங்கிய பகுதி எங்கு உள்ளதோ அவற்றை கண்டிப்பாக ஒவ்வோர் அஹ்மதியும் படிக்க வேண்டும். இன்னும் கூறுவதென்றால், முழு நூலையும் படிக்க வேண்டும்**

**மார்க்கத்தில் பலவந்தம் கூடும் எனத் திருக்குர்ஆனில் எங்கு இடம் பெற்றுள்ளது? இதற்கு மாறாக இறைவன் திருக்குர்ஆனில் لَآ اِكْرَاهَ فِي الدِّيْنِ என்று கூறுகிறான்**

**திருநபி (ஸல்) அவர்களது காலத்தில் எவர்களோடு போர்கள் புரியப்பட்டனவோ அந்த போர்களெல்லாம் மார்க்கத்தைப் பலவந்தமாய்ப் பரப்புவதற்காகச் செய்யப்பட்டவை அல்ல. மாறாக, முஸ்லிம்களுக்கு அநியாயம் செய்த அந்த நிராகரிப்பாளருக்குத் தண்டனை வழங்கும் பொருட்டே நடந்தன. அல்லது அவை தற்காப்புக்காக வேண்டி செய்யப்பட்ட போர்களாகும். அதாவது, எவர்கள் இஸ்லாதை அழித்தொழிப்பதற்காக முன்னனியில் இருந்தார்களாக அவர்களுக்கு எதிராகவும் அல்லது எவர்கள் தமது நாட்டில் இஸ்லாம் பரவுவதைப் பலவந்தமாய்த் தடை செய்தார்களோ அவர்களோடு தங்களது உரிமையைப் பாதுகாப்பதற்காகவும் அல்லது நாட்டில் சுதந்திரத்தை நிலைநாட்டுவதற்காகவும் இஸ்லாத்தின் ஆரம்பகாலத்தில் போர்கள் புரியப்பட்டன. இம்மூன்று வகைகளைத் தவிர ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அவர்களது பரிசுத்த கலீஃபாக்களும் எவ்வித போரும் புரியவில்லை**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் எழுதிய கிஷ்தி நூஹ் (நூஹ் நபியின் கப்பல்) என்ற நூலிலிருந்து...

மேலும் உங்களின் நம்பிக்கையின்படி மஹீஹ் இப்னு மர்யம் வானத்திலிருந்து எந்த வேலைக்காக இறங்கி வருகிறாரோ அதாவது மஹ்தியுடன் சேர்ந்து மக்களைப் பலவந்தமாக முஸ்லிம்களாக்குவதற்காகப் போர் புரிவார். இந்த நம்பிக்கை இஸ்லாத்திற்குக் கெட்ட பெயரை உண்டாக்குகிறது. மார்க்கத்தில் பலவந்தம் கூடும் எனத் திருக்குர்ஆனில் எங்கு இடம் பெற்றுள்ளது? இதற்கு மாறாக இறைவன் திருக்குர்ஆனில் لَآ اِكْرَاهَ فِي الدِّيْنِ என்று கூறுகிறான். அதாவது மார்க்கத்தில் பலவந்தம் இல்லை (2:257).

இவ்வாறிருக்க பலவந்தத்திற்குரிய அதிகாரம் மஸீஹ் இப்னு மர்யமுக்கு எவ்வாறு அளிக்கப்படும்? (மக்களை) இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளச் செய்வதில் அல்லது (அவர்களை) கொலை செய்தல் என்பதைத் தவிர ஜிஸ்யா என்னும் வரியையும் (ஈஸாவாகிய அவர்) ஏற்றுக் கொள்ளமாட்டாராம். இப்போதனை திருக்குர்ஆனில் எந்த இடத்தில் எந்த பாகத்தில் எந்த அதிகாரத்தில் இடம் பெற்றிருக்கிறது.☆

மார்க்கத்தில் பலவந்தம் இல்லை என்று திருக்குர்ஆன் முழுவதும் திரும்பத் திரும்ப கூறிக் கொண்டிருக்கிறது. மேலும் திருநபி (ஸல்) அவர்களது காலத்தில் எவர்களோடு போர்கள் புரியப்பட்டனவோ அந்த போர்களெல்லாம் மார்க்கத்தை பலவந்தமாய்ப் பரப்புவதற்காகச் செய்யப்பட்டவை அல்ல. மாறாக, முஸ்லிம்களுக்கு அநியாயம் செய்த அந்த நிராகரிப்பாளருக்குத் தண்டனை வழங்கும் பொருட்டே நடந்தன. அதாவது எவர்கள் முஸ்லிம்களின் பெரும்பாலானவர்களைக் கொலை செய்தார்களோ சிலரை நாட்டை விட்டு வெளியேற்றினார்களோ மிகவும் கொடூரமான அநியாயங்களை செய்தார்களோ அவர்களுக்குத் தக்க தண்டனை கொடுக்கவே முஸ்லிம்கள் அனுமதிக்கப்பட்டார்கள் எனத் திருக்குர்ஆன் தெளிவாகக் கூறுகிறது. இதைப் பற்றி கூறிவதாவது:

اُذِنَ لِلَّذِيْنَ يُقٰتَلُوْنَ بِاَنَّهُمْ ظُلِمُوْا ؕ وَاِنَّ اللّٰهَ عَلٰى نَصْرِهِمْ لَقَدِيْرُ

பொருள்: எந்த முஸ்லிம்களோடு நிராகரிப்பாளர்கள் போர் புரிகின்றார்களோ அவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்ட காரணத்தால் அந்நிராகரிப்பாளர்களை எதிர்க்க அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு உதவி புரிவதில் இறைவன் வல்லமையுள்ளவனாய் இருக்கிறான்.

அல்லது அவை தற்காப்புக்காகச் செய்யப்பட்ட போர்களாகும். அதாவது, எவர்கள் இஸ்லாதை அழித்தொழிப்பதற்காகப் முன்னனியில் இருந்தார்களோ அவர்களுக்கு எதிராகவும் அல்லது எவர்கள் தமது நாட்டில் இஸ்லாம் பரவுவதைப் பலவந்தமாய்த் தடை செய்தார்களோ அவர்களோடு தங்களது உரிமையைப் பாதுகாப்பதற்காகவும் அல்லது நாட்டில் சுதந்திரத்தை நிலைநாட்டுவதற்காகவும் இஸ்லாத்தின் ஆரம்பகாலத்தில் போர்கள் புரியப்பட்டன.

இம்மூன்று வகைகளைத் தவிர ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அவர்களது பரிசுத்த கலீஃபாக்களும் எவ்வித போரும்

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சஹாபாக்களான ஹஸ்ரத் உமைர் பின் அபீ வக்காஸ், ஹஸ்ரத் குத்பா பின் ஆமிர் அன்ஸாரி, ஹஸ்ரத் ஷஜ்ஜாஃ பின் வஹப், ஹஸ்ரத் ஷிமாஸ் பின் உஸ்மான், ஹஸ்ரத் அபூ அப்ஸ் பின் ஜபர் மற்றும் ஹஸ்ரத் அபூ அகீல் பின் அப்துல்லாஹ் அன்ஸாரி ஆகியோரின் வாழ்க்கை குறிப்புகள்**

**பங்களாதேஷைச் சார்ந்த மதிப்பிற்குரிய மவ்லானா அப்துல் அஸீஸ் சாதிக் சாஹிப் மற்றும் மதிப்பிற்குரிய பஷாரத் அஹ்மது சாஹிப் அவர்களின் மகனான ஷஹீது முஹம்மது ஸஃபருல்லாஹ் சாஹிப் ஆகியோரின் ஜனாஸா காயிப் தொழுகையை ஹுஸூர் அவர்கள் தொழ வைத்தார்கள். மேலும் அவர்களின் நற்குறிப்பை எடுத்துக் கூறினார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 31 ஆகஸ்ட் 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **ஸஹுர்** மாதம் **31 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ۔

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۔ الرَّحْمٰنِ الرَّحِيْمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ۔

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

ஹஸ்ரத் **உமைர் பின் அபீ வக்காஸ்** பத்ர் போரில் கலந்து கொண்ட ஒரு சஹாபி ஆவார்கள். இவரது தந்தை அபீ வக்காஸ் மாலிக் பின் உஹைப். இவர் ஹிஜ்ரி 2 ஆம் ஆண்டில் பத்ர் போரில் ஷஹீதானார்கள். ஹஸ்ரத் உமைர் (ரலி) அவர் சஅத் பின் அபீ வக்காஸ் உடைய சிறிய சகோதரர் ஆவார். ஆரம்ப கால முஸ்லிம்களுள் ஒருவர். இவரது தாயார் ஜம்னா பின்த் ஸுஃப்யான் ஆகும். இவர் குறைஷிகளின் பனூ ஸுஹ்ரா கோத்திரத்தைச் சேர்ந்தவர்.ஏற்கெனவே கூறப்பட்டதுபோன்று பத்ர் போரில் பங்கெடுத்து அங்கேயே ஷஹீதானார். ஹஸ்ரத் உமைர் மற்றும் அம்ர் பின் முஆஸ் இருவருக்கும் சகோதரத்துவத்தை ஏற்படுத்தியிருந்தார்கள்.

(அல் இஸ்திஆப் தொகுதி 3 பக்கம் 294, உமைர் பின் அபீ வக்காஸ் (ரலி) – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது & அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 79, உமைர் பின் அபீ வக்காஸ் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாயித் தராஸில் அரபிய்யில் அச்சிடப்பட்டது)

சிலரது கருத்தின்படி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உமைர் பின் அபீ வக்காஸுக்கும் குபைப் பின் அதி இருவருக்குமிடையில் சகோதரத்துவத்தை ஏற்படுத்தி இந்தார்கள்.

(அயூனில் அஸ்ர் தொகுதி 1 பக்கம் 232 பாப் ஸிக்ருல் முவாஹாத் – 1993 ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் கலமில் அச்சடிக்கப்பட்டது)

இவர்கள் ஷஹாதத் மற்றும் பத்ர் போரில் கலந்து கொண்டது ஆகியவை பற்றி சீரத்துல் காத்தமுன்னபிய்யீனில் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

மதீனாவிலிருந்து சிறிது தூரம் வெளியேறி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூடாரமிடுமாறு கூறி படைகளை ஆய்வு செய்தார்கள். சிறிய வயது கொண்டவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் செல்வதில் ஆர்வம் கொண்டிருந்தார்கள். அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டார்கள். சஅத் பின் அபீ வக்காஸின் தம்பியான உமைர் அவர்களும் சிறு வயதினராக இருந்தார். சிறுவர்கள் திரும்பிச் செல்லுமாறு கட்டளையைக் கேட்டதும் படைக்கு நடுவில் மறைந்து கொண்டார். இருந்தாலும் இவரது முறை வந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவரை திரும்பிச் செல்லுமாறு கூறினார்கள். அதைக் கேட்டு உமைர் அழ ஆரம்பித்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவரது அசாதாரண ஆர்வத்தைக் கண்டு பத்ரில் கலந்து கொள்வதற்கு அனுமதி வழங்கினார்கள்.

(ஹஸ்ரம் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) M.A அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலின் பக்கம் 353)

வரலாற்று நூல்களில் இன்னொரு நூலில் இவ்வாறு வருகிறது. ஆமிர் பின் சஅத் தமது தந்தையிடமிருந்து அறிவிக்கிறார்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ரை நோக்கி செல்வதற்கு முன் வீரர்களை கண்காணித்தபோது நான் எனது சகோதரர் உமைர் பின் அபீ வக்காஸை பார்த்தேன். அவர் மறைந்து கொண்டிருந்தார். உடனே நான் அவரிடம், சகோதரரே! உமக்கு என்ன ஆயிற்று? என்று கேட்டேன். அவர், நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பார்த்து விடக் கூடாதே என்று பயப்படுகிறேன். என்னை சிறுவன் என்று கருதி திருப்பி அனுப்பி விடுவார்களே? நானோ போருக்கு செல்ல விரும்புகிறேன். அல்லாஹ் ஒருவேளை எனக்கு ஷஹாதத் வழங்கலாம் என்றார்.

இவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன் நிறுத்தப்பட்டபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவரை சிறுவராகக் கருதி திரும்பிச் செல்லுமாறு கூறினார்கள். உமைர் அழுது விட்டார். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரை சேர்த்துக் கொள்ள அனுமதி வழங்கினார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 79 – உமைர் பின் அபீ வக்காஸ் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாயித் தராஸில் அரபிய்யில் அச்சிடப்பட்டது)

இவரது வாள் பெரியதாக இருந்தது. ஓர் அறிவிப்பில் வருகிறது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது அருளுக்குரிய கரங்களால் அந்த வாளின் உறையைக் கட்டினார்கள்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 4 பக்கம் 603 – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

ஹஸ்ரத் உமைர் பின் அபீ வக்காஸ் பத்ரில் ஷஹீதானபோது வயது 16 ஆக இருந்தது.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 79 – உமைர் பின் அபீ வக்காஸ் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாயித் தராஸில் அரபிய்யில் அச்சிடப்பட்டது)

16 வயதில் அவரது உருவம் குட்டையாகவும் இருந்திருக்கலாம். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுமதி வழங்கவில்லை. பொதுவாக சிறுவர்களை அனுமதிப்பதில்லை.

இரண்டாவது சஹாபி **குத்பா பின் ஆமிர்**. இவர் அன்ஸாரி சஹாபி ஆவார். ஆமிர் பின் ஹதீதாவின் மகன். இவர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் வஃபாத்தானார்கள். இவரது தாயார் பெயர் ஸைனப் பின்த் அம்ர். இவரது மனைவி உம்மே அம்ர். இவரது மகள் உம்மே ஜமீல். இவர் பைஅத்தே உக்பா முதலாவது மற்றும் இரண்டாவது இரண்டிலும் கலந்து கொண்டவர். மக்காவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை வந்து பார்த்து ஈமான் கொண்ட ஆறு நபர்களில் இவரும் ஒருவர். இவர்களுக்கு முன் அன்ஸாரிகளில் வேறு எவரும் ஈமான் கொள்ளவில்லை.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 294, குத்பா பின் ஆமிர் (ரலி) – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாயித் தராஸில் அச்சடிக்கப்பட்டது)

இவர்களது சம்பவத்தை அதாவது இவர்கள் இஸ்லாத்தை ஏற்றது குறித்து சீரத்துல் காத்தமுன் நபிய்யீனில் எழுதப்பட்டுள்ளது. நுபுவ்வத்தின் 11 –வது ஆண்டில் ரஜப் மாத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவில் யஸ்ரிப் வாசிகளை அதாவது மதீனாவாசிகளை மீண்டும் சந்தித்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குடும்ப பாரம்பரியங்களை விசாரித்தபோது இவர்கள் கஸ்ரஜ் கோத்திரத்தினர் என்றும் யஸ்ரிபிலிருந்து வந்துள்ளார்கள் என்பதும் தெரிய வந்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் அன்புடன் நீங்கள் என் வார்த்தைகளை சிறிது கேட்க முடியுமா? என்று கேட்டார்கள். அவர்கள், ஆம்; நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்? என்று கேட்க ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமர்ந்து அவர்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு விடுத்தார்கள். திருக்குர்ஆனின் சில வசனங்களை ஓதிக்காட்டி தமது பிரச்சாரத்தைக் குறித்து கவனமூட்டினார்கள். மக்கள் ஒருவர் மற்றவரைப் பார்த்தவாறு கூறினார்கள். இது எத்தகைய சந்தர்ப்பம் எனில் யூதர்கள் எவரும் நம்மை முந்தி விடக் கூடாது என்று கூறியவாறு அனைவரும் ஈமான் கொண்டனர். இவர்கள் 6 பேர்.

இவர்களது பெயர்கள் 1) அபூ உமாமா அஸத் பின் ஸராரா. இவர் பனூ நஜ்ஜாஸைச் சார்ந்தவர். உண்மைப்படுத்துவதில் முந்தியவர். 2) அவ்ப் பின் ஹாரிஸ். இவர் பனூ நஜ்ஜாஸைச் சார்ந்தவர். இவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது தந்தை வழிப் பாட்டனார் அப்துல் முத்தலிபின் தாய்வழிப் பாட்டனாரின் கோத்திரத்தைச் சார்ந்தவர். 3) ராபி பின் மாலிக். இவர் பனூ ஸுரைக்கைச் சார்ந்தவர். 4) குத்பா பின் ஆமிர். பனூ ஸல்மாவைச் சார்ந்தவர். 5) உக்பா பின் ஆமிர். பனூ ஹராமைச் சார்ந்தவர். 6) ஜாபிர் பின் அப்துல்லாஹ் பின் ரிஸாப். உனூ உபைதைச் சார்ந்தவர்.

அதன் பிறகு இவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து விடை பெற்றார்கள். செல்லும்போது கூறினார்கள்: கோத்திரத்தின் சண்டைகள் எங்களை மிகவும் பலவீனமாக்கி விட்டன. எங்களுக்குள் ஒருவருக்கொருவர் மிகவும் கருத்து முரண்பாடு உள்ளது. நாங்கள் யஸ்ரிபுக்குச் சென்று எங்கள் சகோதரர்களிடம் இஸ்லாத்தை எடுத்துக் கூறுவோம். அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலம் அவர்களை திரும்ப ஒன்று சேர்க்கலாம். அவர்கள் எல்லா வகையிலும் உதவிக்கு தயாராக இருந்தனர். இம்மக்கள் சென்றனர். இவர்களால் யஸ்ரிபில் இஸ்லாத்தைப் பற்றி பேச்சு வார்த்தைகள் நடந்தன.

(ஹஸ்ரம் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) M.A அவர்கள் எழுதிய சீரத் காத்துமன் நபிய்யீன் என்ற நூலின் பக்கம் 221–222)

இஸ்லாத்தின் காரணமாக பிளவு ஏற்பட்டது என்று கூறுகிறார்கள். ஆனால் இஸ்லாத்தின் காரணமாக அவர்களுக்கிடையில் இருந்த பிளவுகள் அழிவதற்கான அறிகுறிகளை இவர்கள் வெளிப்படுத்தினர். பிறகு எதிரிகளாக இருந்தவர்கள் சகோதரர்கள் ஆயினர்.

நான் சென்ற குத்பாவிலும் கூறினேன். இந்த மக்கள் ஒருவருக்கொருவர் சகோதரர்களாக இருந்தது எதிரிகளின் கண்களை உறுத்தியது. இதனால் அவர்கள் பிளவை ஏற்படுத்த முயன்றனர். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புரிய வைத்ததன் மூலம் அன்னாரின் தூய்மையாக்கும் ஆற்றலால் சகோதரத்துவம் திரும்பவும் ஏற்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சஹாபாக்களில் ஹஸ்ரத் குத்பா அம்பு எய்வதில் நிபுணர் என்ற நிலையில் அறியப்படுகிறார்.

இவர் பத்ர், உஹத், அகழ் மற்றும் அனைத்து போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார். உஹத் போரில் இவர் வலுவாக போரிட்டார்கள். இவருக்கு அதனால் 9 காயங்கள் ஏற்பட்டன. மக்கா வெற்றியின்போது பனூ சலமாவின் கொடி அவர்களது கையில் இருந்தது. பத்ரில் உத்பாவின் உறுதியாக பாதம் எவ்வாறிருந்தது என்றால் அன்னார் இரு அணிகளுக்கு நடுவில் ஒரு கல்லை வைத்தார். இந்த கல் ஓடாத வரை நானும் ஓட மாட்டேன் என்று கூறினார்.

அதாவது அவர் ஒரு நிபந்தனையைக் கூறினார். என் உயிர் போனாலும் போகுமே தவிர நான் புறமுதுகு காட்டி ஓட மாட்டேன் என்றார். இவரது சகோதரர் யஸீத் பின் ஆமிர். இவர் 70 சஹாபாக்களுடன் அக்பாவில் கலந்து கொண்டார். இவர்களின் சந்ததிகள் மதீனாவிலும் மக்காவிலும் இருந்தனர்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 294 – குத்பா பின் ஆமிர் (ரலி) – அஹ்வா யஸீத் பின் ஆமிர் (ரலி) – 1996 ஆண்டு ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாயித் தராஸில் அரபிய்யில் அச்சடிக்கப்பட்டது)

அபீ ஹாதிக் மூலமாக அறிவிக்கப்படுகிறது: ஹஸ்ரத் ஹப்பான் அவர்களின் கருத்தின்படி இவர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடைய கிலாஃபத் காலத்தில் வஃபாத்தார்கள். ஹஸ்ரத் குத்பா பின் ஆமிர் ஹஸரத் உமர் (ரலி) அவர்களுடைய கிலாஃபத் காலத்தில் வஃபாத்தானார்கள்.

(அஸதுல் காபா ஃபீ தமீஸிஸ் சஹாபா தொகுதி 5 பக்கம் 338 – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

மூன்றாவது சஹாபி பற்றி நான் குறிப்பிடப்போவது, **சுஜாவு பின் வஹப்**. இவர் வஹாப் பின் ரபிஆவின் மகன். இவர் யமாமா போரில் இறந்தார். இவர்கள் சுஜாவு பின் அபி வஹப் என்றும் கூறப்படுகிறது. இவரது குடும்பம் பனூ அப்தே சம்சுவின் நெருங்கிய நட்பு கோத்திரம் ஆகும். இவர்கள் நீண்ட உயரமும், ஒல்லியான தோற்றமும் கொண்டவர்கள். ஹஸ்ரத் சுஜாவு அவர்கள் ஆரம்ப காலத்தில் ஈமான் கொண்ட சஹாபாக்களைச் சார்ந்தவர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நபித்துவம் கிடைத்த ஆறு வருடங்களுக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சைக்கினைக் கேற்ப அபிஸீனியா நோக்கி சென்ற இரண்டாவது

குழுவில் கலந்து கொண்டு அபிஸீனியா சென்றார். சில வருடங்களுக்குப் பிறகு மக்காவாசிகள் முஸ்லிமாகி விட்டனர் என்று கேள்விப்பட்டு சுஜாவு மக்காவுக்கு திரும்பி வந்தார். சில காலத்திற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹபாக்களை மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்யுமாறு கட்டளையிட்டார்கள்.

இவர் தமது சகோதரர் உத்பா பின் வஹப் அவர்களுடன் மக்காவை விட்டு விடைபெற்று மதீனா நோக்கிச் சென்றார். ஹுஸூர் (ஸல்) அவர்கள் அவ்ஸ் பின் கூலி அவர்களை சுஜாவு உடன் சகோதர பந்தத்தை ஏற்படுத்தினார்கள். மார்க்க சகோதரராக்கினார்கள். ஹஸ்ரத் சுஜாவு பத்ர், உஹத், அகழ் போர்களிலும் கலந்து கொண்டார்கள். 40 வயதை விட சற்று அதிகமான காலங்கள் வாழ்ந்தார்கள். யமாமா போரில் ஷஹீதானார்கள்.

(அஸதுல் காபா ஃபீ தமீஸிஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 370 – ஷஜ்ஜாஹ் பின் வஹப் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாதர் அஹ்யாயித் தராஸில் அச்சடிக்கப்பட்டது & அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 51 – ஷஜ்ஜாஹ் பின் வஹப் (ரலி) – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாயித் தராஸில் அரபிய்யில் அச்சிடப்பட்டது)

ஹுதைபிய்யாவிலிருந்து திரும்பிய பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிறைய மன்னர்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் வருமாறு கடிதம் அனுப்பினார்கள்.

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. இவர் ஒரு சஹாபி. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருநாள் பிரச்சார மேடையில் குத்பா கொடுப்பதற்காக நின்றார்கள். இறைவனை புகழ்ந்த பிறகு கூறினார்கள். உங்களுள் சிலரை அஜம் மன்னர்களிடம் அனுப்புகிறேன். அதாவது அரபி அல்லாத மன்னர்களிடம் அனுப்பப்போகிறேன். பனீ இஸ்ராயில் மக்கள் ஹஸ்ரத் ஈஸாவிடம் கருத்து வேறுபாடு கொண்டது போன்று நீங்களும் செய்து விடாதீர்கள். மக்காவிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் கூறினர். யாரஸூலல்லாஹ்! நீங்கள் அனுப்பும்போது நாங்கள் உங்களுடன் ஒருபோதும் கருத்து வேறுபாடு கொள்ள மாட்டோம்.

(சீரத் இப்னு கஸீர் பக்கம் 421.... – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இந்த மார்க்கப் பணியை செய்வதில் வாய்ப்பு கிடைத்த சஹபாக்களுள் சுஜாவு பின் வஹப் அவர்களும் அடங்குவர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சுஜாவுவை ஹாரிஸ் பின் அபுஸியுடன் வஸ்ஸானியின் பக்கம் டமாஸ்கஸுக்கு அருகிலுள்ள கோத்தா என்ற இடத்தின் தலைவரிடம் தூதுவராக அனுப்பினார்கள். சிலரின் கருத்தின்படி முன்ஸிர் பின் ஹாரிஸ் பின் அபுஸிமிர் வஸ்ஸானி என்பதாகும். எவ்வாறிருப்பினும் கடிதம் அனுப்பினார்கள். அதன் ஆரம்ப சொற்கள் இதுவாகும்:

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

مِنْ مُحَمَّدٍ رَّسُوْلِ اللّٰهِ (صلی الله علیه وسلم) اِلَی الْحَارِثِ ابْنِ اَبِیْ شِمْرٍ - سَلَامٌ

عَلٰی مَنِ اتَّبَعَ الْهُدٰی وَ اٰمَنَ بِاللّٰهِ وَصَدَّقَ فَاِنِّیْ اَدْعُوْكَ اِلٰی اَنْ تُؤْمِنَ بِاللّٰهِ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ

يَبْقٰی لَكَ مُلْكُكَ۔

முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடமிருந்து ஹாரிஸ் பின் ஸிமிருக்கு ஸலாம். எவர் நேர்வழியைப் பின்பற்றுவாரோ அல்லாஹ் மீது ஈமான் கொண்டு உண்மைப்படுத்துவாரோ அவருக்கு சாந்தி உண்டு. நான் உமக்கு அந்த இறைவனை ஈமான் கொள்ளுமாறு அழைப்பு விடுக்கிறேன். அவன் ஒருவன். அவனுக்கு இணையில்லை. இதே நிலையில் நீர் இருந்தால் உமது ஆட்சி நிலைத்திருக்கும்.

(ஷரஹ் ஸர்கானீ தொகுதி 5 பக்கம் 46.... – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ளா தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது & அல் அஸாபா ஃபீ தமீஸில் சஹாபா தொகுதி 3 பக்கம் 256, ஷஜ்ஜாஹ் பின் வஹப் – பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

ஹஸ்ரத் ஷஜ்ஜாஃ கூறுகிறார்கள்: இந்தக் கடிதத்தை வாங்கிக் கொண்டு புறப்பட்டோம். ஹாரிஸ் பின் அபு ஸிமிரின் மாளிகையின் வாசல் வரை வந்து விட்டோம். அங்கு சில நாட்கள் கழிந்தன. அவைக்குள் செல்ல முடியவில்லை. இறுதியில் நான் அங்கு இன்சார்ஜாக இருந்தவரிடம், நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூதுவராக வந்துள்ளேன் என்று கூறினேன். அந்த தலைவர், அவர் இன்ன நாளில்தான் வெளியில் வருவார். அதற்கு முன் அவரைச் சந்திக்க முடியாது என்று கூறினார். சுஜா கூறினார்: பிறகு அந்த மனிதர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது தூதுச் செய்தி பற்றி கேட்டார். நான் அவருக்கு விபரம் கூறிக்கொண்டிருந்தேன். இதனால் அவரது உள்ளத்தில் நல்ல தாக்கம் ஏற்பட்டது. அவர் அழத் தொடங்கினார். அந்த அரசரின் பாதுகாப்புப் பொறுப்பில் அவர் இருந்தார்.

அவர் கூறினார்: நான் இன்ஜீலில் படித்துள்ளேன். நபிக்கு இதே விபரங்கள்தான் முற்றிலும் அதில் கூறப்பட்டுள்ளன. ஆனால் வருபவர் ஹாமின் தலைநகரில் வருவார் என்று நினைத்தேன். அவர் இந்த நோக்கத்திற்காக யமன் பகுதியில் வந்துள்ளார் என்று தெரிகிறது. எவ்வாறிருப்பினும் நான் அவர் மீது ஈமான் கொள்கிறேன். அந்த பாதுகாப்பின் இன்சார்ஜ் நான் ஈமான் கொள்கிறேன்; உண்மைப்படுத்துகிறேன் என்று கூறினார். ஹாரிஸ் பின் அபுஸிமிர் குறித்து பயமாக உளளது. அவர் கொன்று விடுவார். அத்துடன் இதனையும் கூறினார். அந்த பகுதியில் தலைவர் என்னை கொன்று விடுவார். பிறகு அவர் மிகவும் கண்ணியம் செய்தார். மிக நல்ல முறையில் எனக்கு விருந்தோம்பல் செய்தார். எனக்கு ஹாரிஸ் பற்றி தகவலும் தந்து கொண்டிருந்தார். அவரைப் பற்றி நமது நம்பிக்கையின்மையையும் வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்.

அந்த மனிதர் என்னிடம் கூறினார். ஹாரிஸ் பின் அபு ஸிமிர் உள்ளபடி கைஸரைப் பற்றி பயந்து கொண்டிருக்கிறார். இறுதியில் ஒருநாள் ஹாரிஸ் வெளியில் வந்து அமர்ந்தார். அவரது தலையில் கிரீடம் இருந்தது. எனக்கு அவரைச் சந்திக்க அனுமதி கிடைத்தது. நான் அவர் முன் சென்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது கடிதத்தை அவரிடம் கொடுத்தேன். அந்த கடிதத்தை படித்தார். பிறகு தூக்கி எறிந்தார். கோபம் கொண்டவராக கூறினார்.

எனது ஆட்சியைப் பறிப்பவன் யார்? நான் அவரை நோக்கி செல்கிறேன். அவர் யமனில் இருந்தால் என்ன? அவருக்கு தண்டனை தருவதற்காக அவரிடம் செல்வேன். தனது படைகளை தயார் செய்யுமாறு நிர்வாத்தினரிடம் கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி அவருடன் போர் செய்ய புறப்படுகிறேன் என்றார். உனது ராஜ்ஜியம் போய்விடும் என்று அவர் எனக்கு கடிதம் எழுதி என்னை மிரட்டுகிறார்?

பிறகு ஹாரின் பின் அபி ஸுமைர் அங்கேயே இருந்தார். மக்கள் வந்து சந்தித்தார்கள். பிறகு அவர் வாகனங்களை தயார் செய்யுமாறு கூறினார். என்னிடம் கூறினார். உமது எஜமானரிடம் இங்குள்ள

நிலைமைகளை கூறுங்கள் என்றார். பிறகு அவர் கைசருக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கடிதம் மற்றும் எல்லா விஷயங்களையும் எழுதி அனுப்பினார். என்னிடம் இஸ்லாத்தை எடுத்து வைப்பதற்காக இத்தனை பேர் வந்தார்கள் என்று குறிப்பிட்டிருந்தார். இவர் கொடுத்தனுப்பிய கடிதம் கைஸருக்கு சென்றடைவதற்கு முன்பே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கைஸருக்கு நேரடியாக எழுதி வஹ்யா கல்பி என்பவர் மூலம் கொடுத்தனுப்பிய சென்று சேர்ந்திருந்தது.

கைஸர் ஹாரிஸின் கடிதத்தைப் பார்த்து இந்த நபியின் மீது தாக்குதல் தொடுத்தல், அவரை நோக்கி முன்னேறுதல் ஆகியவற்றை விட்டு விடுங்கள். அவருடன் சண்டையிட வேண்டாம் என எழுதினார். கைஸரின் பதில் கடிதம் ஹாரிஸுக்கு கிடைத்தது. அப்போது வரை சுஜா அங்கேயே தங்கி இருந்தார்கள். அவர்களை அழைத்து எப்போது திரும்பிச் செல்கிறீர்கள் என்று கேட்டான். சுஜா நாளை என்று கூறியதும் அரசன் அவர்களிடம் நூறு மிங்கால் அளவு தங்கம் கொடுத்தனுப்புமாறு கட்டளையிட்டான்.

பிறகு அவர் முதலில் பாதுகாப்பு அதிகாரியாக இருந்தவரை வந்து சந்தித்தார்கள். அவர் தானும் சிறிது பணமும் ஆடைகளும் தந்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் சென்று எனது ஸலாத்தை கூற வேண்டும் என்றும் நான் அன்னாரது மார்க்கத்தை ஏற்றுக் கொண்டேன் என்றும் தெரிவிக்கவும் என்று கூறினார்.

ஷஜ்ஜாஃ கூறுகிறார்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றடைந்தபோது ஹாரிஸ் மன்னனைப் பற்றிய எல்லா விபரங்களையும் கூறினேன். அன்னார், அவனது ஆட்சி அழிந்தது என்று கூறினார்கள். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வாசலில் இருந்த அந்த பாதுகாப்பு அதிகாரியின் ஸலாத்தை எடுத்துரைத்தார். அவர் சம்பந்தமாக எல்லாவற்றையும் கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர் உண்மையே கூறினார் என்று என்றார்கள். சீரத்துல் ஹல்பிய்யாவில் இவை அனைத்தும் கூறப்பட்டுள்ளது.

(அச்சீரத்துன் ஹலபிய்யா தொகுதி 3 பக்கம் 357,358 பாப் ஸிக்ர் கிதாப (ஸல்) இலா அல்ஹாரிஸ் பின் அபீ ஷமர் – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது அவர்கள் பல்வேறு வரலாற்று நூல்களைச் சுட்டிக் காட்டி பல விஷயங்களைக் கூறினாலும் அதிகமாக அன்னார் கூறிய விஷயம் இதுவாகும். அன்னார் எழுதியுள்ளார்கள்:

ஐந்தாவது தப்லீக் கடிதமாக குஸ்ஸானின் ஆட்சியாளருக்கு அனுப்பினார்கள் என்பது அதில் இல்லை. தப்லீக் கடிதங்களுக்கு இந்த நம்பர் மற்ற நூல்களில் இல்லை. ஐந்தாவது தப்லீக் கடிதம் குஸ்ஸானின் ஆட்சியாளரான ஹாரிஸ் பின் அபி ஷுமைருக்கு அனுப்பப்பட்டது. இவரது பகுதி அரபு பகுதியுடன் வட தெற்காக இணைந்திருந்தது. இப்பகுதியின் தலைவர் கைஸரின் கீழ் இருந்தார். ஹஸ்ரத் சுஜா பின் வஹப் அங்கு செல்லும்போது ஹாரிஸ் கைஸரின் வெற்றிக்கான கொண்டாட்டத்தின் ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்தார். அவர் ரோமானிய அரசராக இருந்தார்.

எனவே அவரது வெற்றியை கொண்டாடும் ஏற்பாடு நடந்து கொண்டிருந்தது. அந்த தலைவர் ஹாரிஸை சந்திக்கும் முன் ஹிஜாப் பின் வஹப் அவர்களைச் சந்தித்தார்கள். அவர் மிகச் சிறந்த மனிதர். சுஜாவு மூலம் கேட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அவர் ஏற்றுக் கொண்டார். சிறிது நாள் எதிர்பார்த்த பிறகு இவ்வாறு சம்பவம் நடந்தது. சுஜாவு பின் வஹப் அவர்கள் ஹாரிஸ் என்ற அந்த கிறித்தவரிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கடிதத்தை தந்தார்கள். ஹாரிஸ் கடிதத்தைப் படித்து விட்டு கோபத்தில் தூக்கி எறிந்தார். கோபத்துடன் எறிந்தது மட்டுமின்றி தமது நிர்வாகத்திடம் தாக்குதல் தொடுக்க ஆயத்தம் செய்யுமாறு கூறினார். அப்போது கைஸருக்கு நான் படையெடுக்கப் போகிறேன் என்று கடிதம் எழுதினார்.

கைஸர் ஒருபோதும் நீர் முந்த வேண்டாம். தம்மை பைத்துல் முகத்தஸ் வந்து சந்திக்குமாறு கூறினார். கைஸர் அந்த தலைவரை அழைத்தார். இவ்வாறு அவரது நடவடிக்கை முடிந்தது. ஹதீஸ் மற்றும் வரலாற்றிலிருந்து தெரிய வருகிறது. மதீனா ஒரு காலக்கட்டம் வரை குஸ்ஸானி கோத்திரம் முஸ்லிம்களுக்கு எதிராக எப்போது தாக்குவார்களோ என்ற பயத்தில் இருந்தது.

(ஹஸ்ரம் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) M.A அவர்கள் எழுதிய சீரத் காத்துமன் நபிய்யீன் என்ற நூலின் பக்கம் 828,829)

அவர்கள் சஹாபிக்கு வழங்கிய பதில் காரணமாக அந்த பயம் ஏற்பட்டது. ஹிஜ்ரி 8 ஆம் ஆண்டு ரபியுல் அவ்வல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு செய்தி கிடைத்தது. பனூ ஹஸ்ஸான் உடைய ஒரு கிளையான பனூ ஆமிர் முஸ்லிம்களுக்கு எதிராக தாக்குதல் தொடுக்கத் தயாராகி வருகிறார் என்பதே அந்த செய்தி. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் சுஜாவு அவர்களுடன் 24 வீரர்களுடன் அவர்களை கண்காணிப்பதற்கு அவர்கள் மதீனாவை தாக்க வந்தால் தகவல் தருவதற்கு நியமித்தார்கள்.

அப்போது பனூ ஆமிர் மதீனாவிலிருந்து 5 இரவு தூரத்தில் அஸ்ஸி என்ற மக்காவுக்கும் பஸ்ராவுக்கும் நடுவில் உள்ள இடத்தில் கூடாரம் அடித்து தங்கி இருந்தார்கள். ஹஸ்ரத் சுஜாவு அவர்கள் வீரர்களுடன் பயணம் செய்து பகலில் பதுங்கி இருந்து இரவில் பயணம் செய்து பனூ ஆமிரின் தங்குமிடத்தை சென்று சேர்ந்தார்கள். தமது தலையில் முஸ்லிம்கள் வந்து நிற்பதை திடீரென்று பார்த்து பயந்தனர். அவர்கள் தாக்குதலுக்கு தயாராக வந்திருந்தும் கூட எல்லாவற்றையும் விட்டு விட்டு ஓடி விட்டனர். ஹஸ்ரத் சுஜாவு தமது வீரர்களிடம் கூறினார்கள். அவர்களை பின்தொடர வேண்டாம். அதற்கு தேவையில்லை.

அக்கால நடைமுறைக்கேற்ப போர்ச் செல்வங்களான அவர்கள் விட்டுச் சென்ற ஒட்டகம் மற்றும் ஆடுகளை ஓட்டிக் கொண்டு மதீனா வந்தார்கள். போர்ச் செல்வங்கள் எவ்வளவு அதிகமாக இருந்தது என்பதை ஒரு வீரருக்கு 15 ஒட்டகங்கள் கிடைத்ததிலிருந்து அறியலாம். இது தவிர மற்ற சாமான்களம் கிடைத்தன. தாக்குதலுக்கு வந்தவர்கள் முழு ஆயத்தங்களுடன் வந்திருந்தார்கள். போர்த் தளவாடங்களும் வைத்திருந்தனர்.

(அத்திப்காத்துல் குப்ரா, லி இப்னி சஅது தொகுதி 3 பக்கம் 292 – அப்துல்லாஹ் பின் அப்தே மனாஃப் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாயித் தராஸில் அரபிய்யில் அச்சிடப்பட்டது)

பிறகு ஹஸ்ரத் **ஷிமாஸ் பின் உஸ்மான்** என்ற சஹாபி பற்றி கூறுவேன். இவரைப் பற்றி முன்னரும் ஒரு குத்பாவில் சுருக்கமாக கூறியிருந்தேன். உஸ்மா பின் ஸரீர் இவரது தந்தை ஹிஜ்ரி 3 –ல் உஹத் போரில் ஷஹாதத் கிடைக்கப் பெற்றார். இவரது பெயர் உஸ்மான் ஷிமாஸ் என்பது சுட்டுப் பெயர். இந்த சுட்டுப் பெயரால் பிரபல்யமானார். பனூ மக்ஆமை சார்ந்தவர். ஆரம்பத்திலேயே ஈமான் கொண்டவர்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 393,394 ஷிமாஸ் பின் உஸ்மான் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

இப்னு ஹிஷாம் அவர்கள் ஷிமாஸ் என்ற பெயர் வந்ததன் காரணமாக எழுதுகிறார். ஷிமாஸ் என்ற பெயர் கூறக் காரணம் கிறித்தவ மார்க்கத் தலைவர்களை ஸ்மாஷ் என்று கூறுவர். இவர் அறியாமைக் காலத்தில் மக்காவுக்கு வந்தார். இவர் மிகவும் அழகாக இருந்தார். கிறித்தவ தலைவர்களும் மிக அழகாக இருப்பார்கள். இவரைப் பார்த்து மக்கத்தினர் ஆச்சரியப்பட்டனர். உத்பா பின் ரபியா என்ற உஸ்மானின் மாமா ஷிமாஸை விட அழகிய வாலிபனைக் காட்டுகிறேன் என்று கூறியவாறு தனது சகோதரி மகனாகிய உஸ்மானை கூட்டி வந்து காட்டினார்.

அதிலிருந்து உஸ்மானை மக்கள் ஸிமாஷ் என்று அழைக்கத் தொடங்கினர். ஹஸ்ரத் ஸமாஷ் உடைய பெயரை அவ்வாறு கூறுவதற்கு இன்னொரு காரணம் இவ்வாறு கூறப்படுகிறது. அவரது முகத்தின் சிவப்பான வெண்மை நிறத்தின் காரணமாக அவர் ஷிமாஸ் என்று அழைக்கப்பட்டார். அதாவது அவர் சூரியனைப் போன்று இருக்கிறார் என்று பொருள்படும். இவ்வாறு ஷிமாஸ் என்ற பெயர் அவர அசல் பெயரை விட மேலோங்கி விட்டது.

(சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 462 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

ஹஸ்ரத் ஷிமாஸ் பின் உஸ்மான் இவர்களது தாயார் ஹஸ்ரத் சபிய்யா பின் ரவியாவின் அம்தே ஷம்ஸ் அவர்கள் அபிஸீனியா நோக்கி இடம்பெயர்ந்த இரண்டாவது குழுவில் இருந்தார். ஹஸ்ரத் ஷிமாஸின் தாயார் ஸைமா மற்றும் உத்பா என்ற பத்ரில் கொல்லப்பட்ட மக்கத்து தலைவர்களின் உறவு முறை உள்ளவர். ஸ்மாஷ் பின் உத்பா அபிஸீனியாவிலிருந்து மக்கா திரும்பி மதீனாவின் பக்கம் இடம்பெயர்ந்தனர். ஹஸ்ரம் ஸிமாஷ் பின் உஸ்மான் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்த பிறகு ஹஸ்ரத் முபஷ்ஷிர் பின் அப்துல் முன்ஸி வீட்டில் தங்கியிருந்தார்கள்.

ஸைத் பின் முஸய்யிப் கூறுகிறார்: ஷிமாஸ் பின் உஸ்மான் உஹதில் ஷஹீதாக்கப்படும் வரை முபஷ்ஷிர் பின் அப்துல் முன்திரிடம் இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸ்மாஷ் பின் உஸ்மான் அவர்களை ஹஸ்ரத் அன்ஸிலா பின் அபி ஆமிராவுடன் சகோதரத்துவத்தை ஏற்படுத்தி இருந்தார்கள். ஸ்மாஷின் மகன் பெயர் அப்துல்லாஹ். அவரது மனைவி உம்மே ஹபீப் பின்த் ஷஹீத் ஆகும். இவர்கள் ஆரம்பக் காலத்தில் ஹிஜ்ரத் செய்த பெண்களுள் ஒருவராக இருந்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 394 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது & சீரத்துஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 324 ஷிமாஸ் பின் உஸ்மான் (ரலி) – கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது & அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 130 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாயித் தராஸில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஸ்மாஷ் பின் உஸ்மான் பத்ர் போரில் கலந்து கொண்டார்கள். தைரியமாக சண்டையிட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நான் ஷிமாஸ் பின் உஸ்மானை கேடயத்தைப் போன்று பார்த்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வலமும் இடமும் பார்த்த இடத்தில் எல்லாம் அங்கு ஷிமாஸை பார்த்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது எதிரிகளின் தாக்குதலால் இரத்தம் வந்தபோது இவர் தம்மை கேடயமாக ஆக்கிக் கொண்டார். எந்த அளவுக்கு என்றால் அதனால் அவர் கடும் காயமுற்றார். அதே நிலையில் மதீனாவுக்கு எடுத்து வரப்பட்டார். கொஞ்சம் உயிர் இருந்தது. அவர் ஹஸ்ரத் ஆயிஷாவிடம் கொண்டு செல்லப்பட்டார்.

ஹஸ்ரத் உம்மே ஸல்மா கூறினார்கள்: எனது சச்சாவின் மகனாகிய எனது சகேதரனை என்னை விட்டு விட்டு வேறு ஒருவரிடம் கொண்டு செல்லப்படுகிறதே என்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரை உம்மே ஸல்மாவிடம் கொண்டு செல்லுமாறு கூறினார்கள். அன்னார் அங்கு எடுத்துச் செல்லப்பட்டு அவரது வீட்டிலேயே வஃபாத் ஆகி விட்டார். உஹதிலிருந்து கொண்டு வரப்படும்போதே காயத்துடன் இருந்தார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது கட்டளையால் ஹஸ்ரத் ஷிமாஸை உஹதுக்கு எடுத்துச் சென்று அவர் மதீனாவுக்கு கொண்டு வரப்படும்போது அணிந்திருந்த ஆடையில் அடக்குமாறு கட்டளையிட்டார்கள். அவர் மதீனா எடுத்து வரப்பட்டு ஒரு பகலும் ஓர் இரவும் உயிருடன் இருந்தார். அந்த நிலையிலும் அவர் எதுவும் சாப்பிடவும் இல்லை. மிகவும் பலவீனமாக இருந்தார். நினைவும் இருக்கவில்லை. ஹஸ்ரத் ஷிமாஸ் (ரலி) அவர்களுடைய வஃபாத் 34 வயதில் நடந்தது.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 131 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாயித் தராஸில் அச்சிடப்பட்டது)

பிறகு ஒரு சஹாபி **அபு அஃப்ஸ் பின் ஜபர்**. என் இவரது தந்தை பெயர் ஜபர் பின் அம்ர். இவர்களது வஃபாத் 34 ஹிஜ்ரியில் தமது 70 –வது வயதில் நிகழ்ந்தது. இவர்களது அசல் பெயர் அப்துர் ரஹ்மான். சுட்டுப் பெயர் அபூ அஃப்ஸ். இவரது கோத்திரம் அன்ஸாரிகளில் பனூ ஹாரிஸாவுடன் இருந்தது. அறியாமைக் காலத்தில் இவர்கள் பெயர் அப்துர் உஸ்ஸா. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனை மாற்றி அப்துர் ரஹ்மான் என்று வைத்தார்கள். உஸ்ஸா என்பது அவர்களின் சிலையின் பெயர் என்பதால் அப்துர் ரஹ்மான் என்று மாற்றி வைத்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பத்ர் உட்பட எல்லா போர்களிலும் கலந்து கொண்டவர். கஅப் பின் அஷ்ரப் என்ற யூதனை கொலை செய்த சஹாபிகளில் இவரும் இருந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபு ஹஃப்ஸ் மற்றும் உனைஸ் இருவருக்கும் சகோதரத்துவம் ஏற்படுத்தியிருந்தார்கள். ஹிஜ்ரி 34 –ல் 70 வயதில் வஃபாத் ஆனார்கள். மக்காவில் இவர்களது நிறைய சந்ததிகள் இருந்தனர். ஹஸ்ரத் உஸ்மான் இவர்களது ஜனாஸாவை தொழ வைத்தார்கள். ஜன்னத்துல் பகியில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 5 பக்கம் 204,205 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது) & அல் அஸாபா ஃபீ தமீஸில் சஹாபா தொகுதி 7 பக்கம் 222 – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது & அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 238 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாயித் தராஸில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபு ஹப்ஸ் பின் ஜபர் பற்றி அறிவிக்கப்படுகிறது. இவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நபியாகும் முன்பே எழுதப் படிக்கத் தெரிந்தவராக இருந்தார். அரபிகளில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் மிகவும் குறைவாகவே இருந்தனர். அபு அஃப்ஸ் மற்றும் அபு புர்தா பின் நயார் இருவரும் இஸ்லாத்தை

ஏற்றனர். இருவரும் சேர்ந்து பனூ ஹாரிஸாவின் சிலைகளை உடைத்தனர். ஹஸ்ரத் உமர் மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் இருவரும் இவர் மூலமாக ஸதகா வசூல் செய்ய அனுப்புவார்கள். அதாவது நிதித்துறையின் பொறுப்பு இவர்களிடம் இருந்தது.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 238 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாயித் தராஸில் அச்சிடப்பட்டது)

நபித்துவக் காலத்தில் அபு அப்ஸின் கண்பார்வை போய் விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவரிடம் ஒரு கோலைக் கொடுத்து அதிலிருந்து வெளிச்சத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்றார்கள். அக்கோல் அவருக்கு முன் ஒளி தந்தது.

(அல் அஸாபா ஃபீ தமீஸில் சஹாபா தொகுதி 7 பக்கம் 222 – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

இதன் பொருள் உமது கையில் இந்த கோல் இருக்கும். அதாவது கண் தெரியாதவர்கள் ஒரு கோல் வைத்திருப்பர். அது போல் வைத்துக் கொள்ளுங்கள். அதே வேளையில் பார்வை குறைவான நேரத்தில் அதிலிருந்து வெளிச்சம் வெளிப்பட்டும் இருக்கலாம். சில வேளை இரவு நேரத்தில் வெளிச்சம் வெளிப்பட்டிருக்கலாம். இன்னும் சில சஹாபாக்கள் பற்றியும் இவ்வாறு அறிவிப்பு காணப்படுகிறது. சில வேளை அவர்கள் இரவில் பயணம் செய்யும்போது அந்த கோலில் இருந்து வெளிச்சம் வந்தது.

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 4 பக்கம் 693 ஹதீஸ் எண் 13906 – முஸ்னது அனஸ் பின் மாலிக் (ரலி) – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

ஒரு அறிவிப்பில் இவ்வாறும் வருகிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபாக்கள் பயணம் செய்தபோது இரவில் இருட்டாக இருந்தது. அவர்களுக்கு இதுபோன்று அல்லாஹ் வெளிச்சம் தந்தான். அவ்வொளி அவர்களின் முன் போய்க் கொண்டிருந்தது.

ஹஸ்ரத் அபு அப்ஸின் மகன் அறிவிக்கிறார்: ஹஸ்ரத் அபு அப்ஸ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பின்னால் தொழுது வந்தார்கள். பிறகு தனது பனூ ஹாரிஸாவிடம் செல்வார்கள். ஒருமுறை இருள் நிறைந்த இரவில் மழையும் பெய்தது. அவர் தனது வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தார். அவரது கோலில் இருந்து வெளிச்சம் வெளி வந்தது. அது அவருக்கு வழி முழுவதும் ஒளி தந்தது.

(அல்முஸ்தத்ரிக் அலஸ் ஸஹ்யைன் தொகுதி 6 பக்கம் 2028 ஹதீஸ் எண் 5495)

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அவரது நோயுற்ற காலத்தில் நலம் விசாரிக்கச் சென்றார்கள். அவரே நினைவில்லாமல் இருந்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் உம்மை எந்த நிலையில் பார்க்கிறீர் என்றார்கள். அவர், எமது நிலைமை மிகவும் நன்றாக இருப்பதாகப் பார்க்கிறேன் என்றார். ஓர் ஒட்டகத்தை கட்டும் கயிறு மட்டும்தான் தவறுதலாக காணாமல் போய் விட்டது. அதனை தவிர வேறு எந்த தவறும் நாம் செய்யவில்லை என்றார்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 238 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாயித் தராஸில் அச்சிடப்பட்டது)

இவர்களை சந்தா வசூல் செய்வதற்கு அனுப்பப்படுவார்கள். இவர்களது பொறுப்பை நிறைவேற்றும் தன்மை இவ்வாறு இருந்தது. ஒட்டகம் கட்டும் ஒரு கயிறு தவறுதலாக காணாமல் போய் விட்டது. அதனை குறித்து வாழ்வில் கடைசி நேரம் வரை நிம்மதியிழந்து இருந்தார்கள். மரண வேளையிலும் இதே சிந்தனை தான் இருந்தது. அந்த கயிறு மறுவுலகில் நமக்கு சோதனையாக ஆகி விடக் கூடாதே என்று நினைத்தார்கள். இவர்கள்தான் அல்லாஹ்வின் பயத்திலும் ஈமானிலும் இந்த உயர்வான நிலைக்கு கொண்டு சென்றவர்கள் ஆவர்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களை விட சீக்கிரமாக தொழுபவர்கள் யாரும் இருக்க முடியாது. முதலில் நேரத்திற்கு தொழுபவர்களாக இருப்பார்கள். மதீனாவில் இரு சஹாபிகளின் வீடு மஸ்ஜிதை விட்டும் மிகத் தொலைவில் இருந்தது. ஒருவர் ஹஸ்ரத் அபு லுபாபா பின் அப்துல் முன்ஸர். இவர் பனூ அவ்ஸ் கோத்திரத்தைச் சார்ந்தவர். இரண்டாவது அபு அப்ஸ் பின் ஜபர் வீடு. இவரது வீடு பனூ ஹாரிஸாவைச் சார்ந்ததாக இருந்தது.

அபு லுபாபாவின் வீடு குபாவில் இருந்தது. அபு அப்ஸ் வீடு பனூ ஹாரிஸாவில் இருந்தது. இருவரின் வீடும் கணிசமான தூரத்தில் இருந்தது. இந்த இரு சஹாபிகளும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் சேர்ந்து தொழுவார்கள். பிறகு தமது சமுகத்தாரிடம் திரும்புவார்கள். அவர்கள் அஸ்ர் தொழும் முன் சென்று சேர்ந்து விடுவார்கள்.

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 4 பக்கம் 607 ஹதீஸ் எண் 12516 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

இதுவே இம்மக்கள் வேகமாக நடக்கும் ஆற்றல். மேலும் இவர்கள் மிக நீண்ட தூரத்தைக் கடந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் தொழுவதற்கு வருவார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்ஸ் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவரது பாதம் அல்லாஹ்வின் வழியில் நின்றதோ அந்த பாதத்திற்கு அல்லாஹ் நெருப்பை ஹராமாக்கி விட்டான்.

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 5 பக்கம் 469 ஹதீஸ் எண் 16031 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

அதாவது அல்லாஹ்வின் வழியில் ஜிஹாது செய்பவர், அல்லாஹ்வின் வழியில் செல்பவர், தம்மை கஷ்டத்தில் போட்டுக் கொள்பவர் ஆகியோர் மற்றும் இறை வழியில் அழைப்பவர்கள் இவர்களுடன் நீண்ட தூரத்திலிருந்து பள்ளிவாயிலுக்கு தொழ வருபவர்களும் நெருப்பை அல்லாஹ் ஹராமாக்கியவர்களில் அடங்குவர்.

பிறகு ஒரு சஹாபி **அபு அகில் பின் அப்துல்லாஹ்** அன்ஸாரி. இவரது தந்தை அப்துல்லாஹ் பின் ஸவுலிபா. இவர் ஹிஜ்ரி 2 –ல் யமாமா போரில் வஃபாத் ஆனார். இவரது பெயர் அப்துர் ரஹ்மானி இராகி பின் அப்துல்லாஹ் என்பதாகும். இவரது பழைய பெயர் அப்துல் உஸ்ஸா ஆகும். இஸ்லாத்தை ஏற்ற பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவரது பெயரை அப்துர் ரஹ்மான் என்று வைத்தார்கள்.

இவர் பலீயின் ஒரு கிளையான பனூ நயீப் என்ற கோத்திரத்தைச் சார்ந்தவர். அன்ஸாரிகளின் குடும்பமாக சாஹ்லுபா பின் குப்பாவுக்கு நெருக்கமான நாட்டிலுள்ள கோத்திரம். இவரது சுட்டுப் பெயர் அபு அகில். இவர் இதே பெயரில் பிரபல்யமாக இருந்தார். பத்ர், உஹது, அகழ் மற்றும் அனைத்து போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். 12 ஹிஜ்ரியில் யமாமா போரில் ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் காலத்தில் வஃபாத் ஆனார்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 248,249 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாயித் தராஸில் அச்சிடப்பட்டது)

இவர் இஸ்லாத்தை ஏற்ற சம்பவம் இவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து இடம் பெயர்ந்து மதீனா மனவ்வரா சென்றார்கள். இளைஞர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து ஈமானுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் பைஅத் செய்யும் சிறப்பைப் பெற்றார்கள். சிலைகளைக் கடுமையாக வெறுத்தார்கள். இந்த நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களிடம் உங்கள் பெயர் என்ன? என்று கேட்டார்கள். அவர் அப்துல் உஸ்ஸா என்று கூறினார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இல்லை. இன்றிலிருந்து உமது பெயர் அப்துர் ரஹ்மான் ஆகும் என்றார்கள். இவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதை ஏற்றுக் கொண்டவாறு எல்லாரிடமும் நான் அப்துல் உஸ்ஸா அல்ல. அப்துர் ரஹ்மான் ஆவேன் என்று கூறினார்கள். அவரது குடும்பத்தில் இராஷா பின் ஆமிர் என்று ஒருவர் இருந்தார்.

(தாலிப் ஹாஷ்மி அவர்கள் எழுதிய ஆஸ்மான் ஹிதாயத் கே சத்தர் சிதாரே என்ற நூலின் பக்கம் 491,492 லாஹூரில் அச்சடப்பட்டது)

இவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸதகா வாங்குமாறு கட்டளையிட்டபோது முழு இரவும் பணி செய்யக் கூடிய சஹாபிகளில் ஒருவராக இருந்தார். கிடைப்பதை ஸதகா செய்வார். இந்த வகையில் இவரைப் பற்றி புகாரியில் வருகிறது. ஹஸ்ரத் அபு மஸ்ஹூது அறிவிக்கிறார்: ஸதகாவுக்கான கட்டளை வந்ததும் கூலி வேலை செய்யும் சுமையை எடுத்துக் கொண்டார். அபு அகில் தமது பணியின் கிடைத்த பணத்தின் பாதியைக் கொண்டு வந்தார். ஒருவர் அதனை விட அதிகம் கொண்டு வந்தார்.

நயவஞ்சகர்கள் கூறினர்: அல்லாஹ் இவரது இந்த ஸதகாவை விட்டும் தேவையற்றவன். ஆனால் அந்த மனிதர் செய்த ஸதகா காட்டுவதற்காக இருந்தது. அப்போது இந்த வசனம் இறங்கியது.

اَلَّذِيْنَ يَلْمِزُوْنَ الْمُطَّوِّعِيْنَ مِنَ الْمُؤْمِنِيْنَ فِي الصَّدَقٰتِ وَالَّذِيْنَ
لَا يَجِدُوْنَ اِلَّا جُهْدَهُمْ فَيَسْخَرُوْنَ مِنْهُمْ ۔ سَخِرَ اللّٰهُ مِنْهُمْ وَلَهُمْ عَذَابٌ اَلِيْمٌ (9:79)

நம்பிக்கையாளர்களுள் ஆர்வத்துடன் அதிகமாக ஸதகா கொடுப்பவர்களை நயவஞ்சகர்கள் குறை சொல்கின்றனர். தாம் உழைத்து சம்பாதிப்பது தவிர வேறு எந்த ஆற்றலும் இல்லாதவர்களையும் அந்த தியாகத்திற்காக அவர்களை ஏளனம் செய்கின்றனர். அல்லாஹ் இந்த கடும் எதிரிகளின் ஏளனத்திற்கு கடும் தண்டனை தருவான். அவர்களுக்கு கடும் தண்டனையை வழங்குவான்.

(சஹீஹ் புகாரி கிதாபுத் தஃப்ஸீர்..... தொகுதி 10 பக்கம் 371 ஹதீஸ் எண் 4668 – லாஹூரிலுள்ள நஸாரத் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக இவர்கள் எத்தகைய வியத்தகு காட்சிகளைக் காட்டினர். எவ்வாறு முயற்சி செய்கின்றனர்? இந்த மக்களின் முன்மாதிரிகளை ஒப்புக் கொண்டவாறு அல்லாஹ் பின்னால் வருபவர்களும் அந்த முன்மாதிரியில் நடக்க வலியுறுத்தியுள்ளான்.

அல்லாமா இப்னு ஹஜ்ர் அஸ்கலானி இதனை விவரித்துக் கூறியுள்ளார்கள்: அபு அகிலை சஹாபே சாஹ் என்று கூறப்படுகிறது. சம்பவம் இவ்வாறாகும். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் பெரும் பொருளைக் கொண்டு வந்தார்கள். தமது பாதி செல்வத்தைக் கொண்டு வந்திருந்தார்கள். அப்போது ஏழை முஸ்லிம்களில் அபு அகீல் முன் வந்து கூறினார்கள்.

அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்னிடம் இரண்டு சாஹ் பேரீத்தம்பழம் இருந்தது. ஒரு சாஹ் அளவு வீட்டில் வைத்து விட்டு ஒரு சாஹ் அளவை இங்கு கொண்டு வந்துள்ளேன். சில அறிவிப்புகளில் ஒரு சாஹ் அளவுதான் அவரிடம் இருந்தது. அதில் பாதியை கொண்டு வந்தார் என்று வந்துள்ளது. அதாவது பாதியை வீட்டில் வைத்து விட்டுப் பாதியைக் கொண்டு வந்துள்ளேன். அப்போது நயவஞ்சகர்கள் அல்லாஹ்வும் அவனது ரஸூலும் அபு அகிலின் ஒரு சாஹ் பேரீத்தம்பழங்களை விட்டும் தன்னிறைவு பெற்றவர்கள் என்று கூறினர்.

அப்போது அல்லாஹ் கூறினான்:

اَلَّذِيْنَ يَلْمِزُوْنَ الْمُطَّوِّعِيْنَ مِنَ الْمُؤْمِنِيْنَ فِي الصَّدَقٰتِ وَالَّذِيْنَ لَا يَجِدُوْنَ اِلَّا جُهْدَهُمْ

(அல் அஸாபா ஃபீ தமீஸில் சஹாபா தொகுதி 7 பக்கம் 233 – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

இந்த நயவஞ்சகர்கள் முஃமின்கள் ஸதகா செய்யும்போது ஏளனம் செய்கின்றனர். முஃமின்களான அவர்களுள் சிலர் தமது உழைப்பிலிருந்து சிறிது தருவது தவிர வேறு எதுவும் முடியாமல் உள்ளனர். முஸைலமா கஸ்ஸாபுடன் கடைசி சண்டையிட்டார்கள். இவர் அன்ஸாரியாவார்கள். சஅத் கூறுகின்றார்கள்: யமாமா போரில் முதலில் அபு அகில் காயமுற்றார்கள். அவர்களது தோளுக்கும் நெஞ்சுக்கும் இடையில் அம்பு பட்டு கோணலாகி விட்டது. ஷஹீதாகி விடவில்லை. அவரது வலப்புறம் அம்பினால் பலவீனமாகி விட்டது. இது ஆரம்பத்தில் நடந்தது. உடனே அவரை தூக்கிக் கொண்டு கூடாரத்திற்கு வந்தார்கள். சண்டை முடிவுக்கு வந்தது. முஸ்லிம்களுக்கு தோல்வி ஏற்பட்டது.

முஸ்லிம்கள் பின்னால் சென்று சென்று தாம் தங்கியிருந்த இடத்தை விட்டும் பின்னால் சென்று விட்டனர். அப்போது ஹஸ்ரத் அபு அகில் காயமுற்றிருந்தார்கள். இவர்கள் மஅன் பின் அதியின் குரலைக் கேட்டார்கள். அவர் அன்ஸார்களை உரத்த குரலில் சண்டையிட வருமாறு அழைத்தார். அல்லாஹ் மீது நம்பிக்கை வையுங்கள். அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வையுங்கள். எதிரிகள் மீது மீண்டும் தாக்குதல் கொடுங்கள்.

மஅன் மக்கள் மத்தியில் வேகமாகப் போய்க் கொண்டிருந்தார். அப்போது அன்ஸாரிகள் நீங்கள் மற்றவர்களை விட்டு பிரியுங்கள் என்று கூறியிருந்தனர். எனவே அன்ஸாரிகள் ஒவ்வொருவராகப் பிரிந்து ஒன்றாகக் கூடினர். நோக்கம் ஒன்று சேர்ந்து தாக்குதல் தொடுப்பதாக இருந்தது. இதனால் எல்லா முஸ்லிம்களின் பாதமும் உறுதிப்பட வேண்டும். வீரம் அதிகமாக வேண்டும் என்பதாகும்.

அப்துல்லாஹ் பின் உமர் கூறுகின்றார்கள்: அப்போது அபு அகில் அன்ஸாரிகளிடம் செல்வதற்காக எழுந்தார். காயமுற்ற நிலையில் இருந்தார். மிகவும் பலவீனம் இருந்தும் எழுந்தார். நான், அபு அகிலே! உம்மிடம் சண்டையிட சக்தி கிடையாது என்று கூறினேன். அதற்கு அவர், அழைப்பவர் என்னை அழைத்தார் என்றார். அவர் அன்ஸாரிகளை அழைக்கிறார். நான், அவர் சண்டையிடத் தகுதியானவர்களை அழைக்கிறார் என்று கூறினார். அதற்கு அபு அகில், அவர் அன்ஸாரிகளை அழைக்கிறார். நான் காயமுற்றவனாக இருந்தாலும் அன்ஸாரி ஆவேன். எனவே நான் அவரது அழைப்பிற்கு கண்டிப்பாக செல்வேன். முட்டுக்காலால் செல்ல நேர்ந்தாலும் சரியே என்று கூறினார்.

ஹஸ்ரத் இப்னு உமர் கூறுகின்றார்: ஹஸ்ரத் அபு அகில் தம்மை தயார் செய்து கொண்டு தமது வலது கையில் வெறும் வாளை எடுத்துக் கொண்டு, அன்ஸாரிகளே! ஹுனைனின் பக்கம் மீண்டும் தாக்குதல் தொடுங்கள் என்று குரல் கொடுத்தார். அன்ஸாரிகள் ஒன்று கூடினர். அல்லாஹ் அவர்கள்1 மீது அருள் புரிவானாக. அவர்கள் மிகவும் வீரத்துடன் எதிரிகளிடம் சென்றார்கள். எதிரிகளை போர்க்களத்தை விட்டு ஓடி தோட்டத்தில் நுழையும் கட்டாயத்தை ஏற்படுத்தினார். முஸ்லிம்கள் உள்ளே நுழைந்து வாளை வீசினர். ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் அபு அகிலைப் பார்த்தேன். காயமுற்ற அவர்களது கை தோளிலிருந்து அறுந்து கீழே விழுந்தது. அவர்களது உடலில் 14 காயங்கள்

இருந்தன. அதில் ஒவ்வொரு காயமும் உயிரை வாங்குவதாக இருந்தது. எதிரி முஸைலமா கொலையுண்டான். அவனும் அங்கேயே கிடந்தான். அபு அகில் காயத்துடன் இருந்தார்கள். அவர்கள் இறுதி மூச்சு விட்டுக் கொண்டிருந்தார்கள். நான், அபு அகிலே! என்றேன். நான் இருக்கிறேன் என்று அவர் கூறினார்.

நடுங்கும் குரலில் யாருக்கு வெற்றி கிடைத்தது என்று கேட்டார். முஸ்லிம்களுக்குதான் வெற்றி கிடைத்தது என்ற நற்செய்தியை உங்களுக்கு தருகிறோம். அல்லாஹ்வின் எதிரி முஸைலமா கஸ்ஸாப் கொலையுண்டான் என்றேன். உடனே அவர் புகழைக் கூறியவாறு வானத்தின் பக்கம் விரலை நீட்டினார். அப்படியே இறந்து விட்டார்கள். அல்லாஹ் அவர்களுக்கு கருணை காட்டுவானாக.

ஹஸ்ரத் இப்னு உமர் கூறுகிறார்: நான் திரும்பிய பிறகு நடந்தவற்றை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கூறினேன். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் அவர் மீது அருள் புரிவானாக. எப்போதும் ஷஹாதத்தை கேட்டு வந்தார். எனக்கும் தெரியும். அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மிகச் சிறந்த சஹாபிகளுள் ஒருவர். இவர் ஆரம்பத்திலேயே ஈமான் கொண்டவர். இது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் வார்த்தைகள் ஆகும்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 249 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாயித் தராஸில் அச்சிடப்பட்டது & முஹம்மது யூசுஃப் அவர்கள் எழுதிய ஹயாத்துஸ் சஹாபா என்ற நூல், தொகுதி 1 பக்கம் 801–803 – லாஹூலிலுள்ள மக்தப்பத்துல் இல்மில் அச்சிடப்பட்டது)

அல்லாஹ் இந்த சஹாபாக்களின் தகுதியை உயர்த்திக் கொண்டே செல்வானாக.

தொழுகைக்குப் பிறகு இரண்டு ஜனாஸா காயிப் தொழுகை தொழ வைப்பேன். முதல் ஜனாஸா கண்ணியத்திற்குரிய மவ்லானா அப்துல் அஸீஸ் சாத்திகா முரப்பி பங்களாதேஷ். இவர் 26 ஜூலை 2018 –ல் வஃபாத் ஆனார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

4 ஆம் வகுப்பு படிக்கும் போது இவர்கள் காதியான் சென்றார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபிகளினால் பராமரிக்கப்படும் வாய்ப்பு பெற்றார். இந்தியா பிரிவினைக்குப் பிறகு மாணவர்கள் தத்தமது நாட்டிற்குச் செல்லுமாறு வழிகாட்டப்பட்டது. இவர் பெங்கால் திரும்பிச் சென்றார். திரும்பி தலைமையகத்திற்கு வர கவலையாக இருந்தார். அபாயகரமான நிலையில் கல்கத்தாவிலிருந்து டில்லிக்கு வந்தார். பயணத்தில் இந்து சீக்கியர்களுக்கு பெரும் வியப்பு இந்த முஸ்லிம் இளைஞன் இதுபோன்ற மோசமான நிலையில் இரயிலில் எப்படி பதற்றமின்றி தனியாக பயணம் செய்கிறார்? என்று ஆச்சரியப்பட்டனர்.

டில்லி வந்த பிறகு ஜமாஅத் இவரை ஒரு விமானத்தில் லாஹூர் அனுப்பியது. அப்போது மேற்கத்திய பாகிஸ்தானும் கிழக்கத்திய பாகிஸ்தானும் ஒரே நாடாக இருந்தன. இவர் நலமாக ரப்வா சென்றடைந்தார். அங்கு ஜாமிஆவில் 6 ஆண்டுகள் படித்தார். பிறகு ஜாமிஅத்துல் முபஷ்ஷிரீனில் 3 ஆண்டுகள் கோர்ஸும் முழுமை செய்தார். பட்டம் பெற்றார். பிறகு பஞ்சாப் யுனிவர்சிட்டி மற்றும் பெஷாவர் யுனிவர்சிட்டி இரண்டிலும் மவ்லவி பாஸில் பட்டம் பெற்றார். அதன் பிறகு பாகிஸ்தானில் பைஸலாபாத் ஜமாஅத்தில் நியமிக்கப்பட்டார்.

பிறகு 1964 –ல் இவர்கள் கிழக்கு பெங்காலில் நியமிக்கப்பட்டார்கள். அங்குள்ள ஜமாஅத்தில் பணி செய்தார். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் திருக்குர்ஆனை பெங்காலி மொழியில் மொழிபெயர்ப்பதற்காக ஒரு குழு அமைத்தார்கள். கண்ணியத்திற்குரிய காஸி முஹம்மது நஸீர் சாஹிப் பரிந்துரையின்படி குழுவில் மவ்லவி அப்துல் அஸீஸ் சாஹிபும் இடம் பெற்றார். இவருடன் முஸஃப்பர் தீன் பெங்காலி சாஹிப் மற்றும் முஹம்மதலி சாஹிப் பெங்காலி ஆகியோர் பணி செய்தனர். இந்த மொழிபெயர்ப்புக்காக இவர்கள் ரப்வாவில் இருந்தார்கள்.

அதன் பிறகு முஹம்மது அமீர் சாஹிப் சவுத்ரி முஃப்பருத்தீன் சாஹிப் இறந்த பிறகு இந்த பணிக்காக டாக்காவுக்கு 1979 –ல் இவர்கள் அனுப்பப்பட்டார்கள். மவ்லவி முஹம்மது அமீர் சாஹிப் விடை பெற்ற பிறகு அன்னார் தனியாக பணி செய்தார்கள். இறுதியில் நூற்றாண்டு ஜுப்ளிக்குப் பிறகு பங்களா குர்ஆன் பதிப்பு முழுமை அடைந்தது. நாட்டில் பல இடங்களில் இவர்கள் முபல்லிக் ஆக பணி செய்தார்கள். தஃலீம் தர்பிய்யத் மற்றும் தப்லீக் பணியாற்றினார்கள். பலமுறை எதிரிகளின் தரப்பிலிருந்து உடல் காயங்கள் ஏற்படுத்தப்பட்டன. இறை வழியில் கைதாகும் வாய்ப்பும் பெற்றார்.

1992 –ல் பகுஷிபஸார் டாக்காவில் ஜமாஅத் தலைமையகத்தில் எதிரிகள் தாக்குதல் நடத்தியபோது மிகவும் தைரியத்துடன் தனியாக சண்டையிட்டார்கள். இதனால் இவர்களின் தலையில் இருந்து உடல் முழுவதும் நிறைய காயங்கள் ஏற்பட்டன.

இவரது நினைவாக மனைவியுடன் 3 மகள்கள் 2 மகன்கள். மகன் வழியில் பேரன் பேத்தி மகள் வழியில் பேரன் பேத்திகள் உள்ளன. இவரது 3 மகள்கள் பங்களாதேஷில் உள்ளனர். மகன்களில் ஒருவர் அமெரிக்காவில் உள்ளார். இரண்டாவது மகன் ஹபீபுல்லாஹ் சாதிக் சாஹிப் யூ.கே –வில் தங்கி இருக்கிறார். MTA News துறையில் பணி செய்கிறார். அல்லாஹ் மர்ஹூமின் தகுதியை உயர்த்துவானாக. அவர்களது பிள்ளைகளுக்கும் இவரது நன்மைகளை தொடரும் வாய்ப்பு வழங்குவானாக.

இரண்டாவது ஜனாஸா முஹம்மது சஃபருல்லாஹ் சாஹிப் ஷஹீது. இவர் கண்ணியத்திற்குரிய பஷாரத் அஹ்மது சாஹிப் ஸய்யித் வாலா நாங்கனாவைச் சார்ந்தவர். இவர் 29 ஆகஸ்டு நாங்கனாவில் மாலை நேரத்தில் இவரது கடையில் கொள்ளையர்களின் தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூட்டினால் ஷஹீதானார்கள். விபரம் தரப்பட்டபடி 6 கொள்ளையர் ஆயுதங்களுடன் மோட்டார் சைக்கிளில் வந்தனர். இவர்களது தங்க நகைக்கடையில் புகுந்து கொள்ளையடித்தனர். பிறகு சுட்டனர். வழியில் ஒருவர் அதனால் காயமுற்றார். உயிரையும் விட்டார்.

அவர்கள் கொள்ளை அடித்து விட்டுத் திரும்பும்போது சஃபருல்லாஹ் சாஹிப் மீது சுட்டனர். 3 குண்டுகள் செலுத்தினர் அதில் அவர் இறந்தார். சஃபருல்லாஹ் சாஹிப் கடையில் அவருடன் வேறு சிலரும் இருந்தனர். ஆனால் அவர்கள் சஃபருல்லாஹ் சாஹிபையே இலக்கு நிர்ணயித்தனர். அவருக்கு அதிக நன்மையே கிடைக்கும். மர்ஹூம் நல்ல இன்முகத்துடன் இருப்பார். விருந்தாளிகளைக் கவனிப்பவர்.

இதனால் இவரது வஃபாத் நிறைய அளவில் மக்கள் இரங்கலுக்கு வந்தனர். பெரிய அளவில் ஜமாஅத்திற்கு வெளியிலுள்ளவர்கள் வந்திருந்தனர். இவர் கிலாஃபத்துடன் பெரும் அன்பு கொண்டவர். ஒவ்வொரு திட்டத்திற்கும் லப்பைக் கூறுபவர். ஜமாஅத்துடன் தொழக் கூடியவர். மூஸி ஆவார்கள். தைரியமான வீரமிக்க மனிதர். இப்போது தஃலீம் செயலராக ஸய்யிது துவாலாவில் பணியாற்றி வந்தார்.

சஃபருல்லாஹ் வயது 30. திருமணமாகி முஹம்மது தல்ஹா என்ற ஒன்றரை வயது மகன் உள்ளான். மர்ஹூம் தமது நினைவாக மனைவி மகள் பெற்றோர் இவர்களுடன் ஒரு சகோதரர் 5 சகோதரிகளை விட்டுச் சென்றுள்ளார். அல்லாஹ் மர்ஹூமின் தகுதியை உயர்த்துவானாக. இவரது குடும்பத்திற்கு பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக. இவர்களது நன்மைகளை தொடரும் வாய்ப்பு வழங்குவானாக.

## முழு இந்தியாவின் ஜமாஅத்துகளில் தஹ்ரீகே ஜதீது சந்தாவில் காதியான் முதல் இடத்தைப் பெற்றுள்ளது – வாழ்த்துக்கள்! காதியான் வாசிகளே உங்களுக்கு வாழ்த்துக்கள்!!

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் ஒவ்வொரு குத்பாவும் முழு உலகிலும் கேட்கப்படுகிறது. ஆனால் மற்ற குத்பாக்களை விட தஹ்ரீகே ஜதீது மற்றும் வக்ஃபே ஜதீது தொடர்பான குத்பாக்களை கேட்பதற்கு ஒரு துடிப்பு மற்றும் ஆவல் இயல்பாகவே நம்மிடம் இருந்து வருகின்றது. அதற்கு பல காரணிகள் இருக்கின்றன: உதாரணமாக,

♦ ஹுஸூர் அவர்கள் அந்த குத்பாவில் முழு உலகிலுமுள்ள ஜமாஅத்துகள் செய்த பொருள் தியாகங்கள் தொடர்பான ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்களைப் பற்றி எடுத்துக் கூறுகின்றார்கள்.

♦ முழு உலகிலும் ஆண்டு முழுவதும் அஹ்மதிகள் செய்த பொருள் தியாகங்களின் ஒட்டு மொத்த வசூலைக் குறித்து அறிவிப்பு செய்கின்றார்கள்.

♦ முதல் பத்து இடங்களைப் பெற்ற நாடுகளின் பெயரைக் கூறுகின்றார்கள்.

♦ அதிகமாக தியாகம் செய்த மாநிலங்கள் அல்லது மாவட்டங்கள் அல்லது ரீஜினலின் பெயரைக் கூறுகின்றார்கள்.

♦ முதல் பத்து இடங்களைப் பெற்ற ஜமாஅத்தின் பெயரைக் கூறுகின்றார்கள்.

♦ தனி நபர் விகிதாச்சாரத்தின்படி அதிகமாக சந்தா செலுத்திய நாடுகளின் பெயரைக் கூறுகின்றார்கள்.

♦ தஹ்ரீகே ஜதீது திட்டத்தில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கையை கூறுகின்றார்கள்.

♦ கடந்த ஆண்டை விட பொருள் தியாகத்தில் ஏற்பட்ட அபிவிருத்தி மற்றும் புதிதாக இணைந்த அஹ்மதிகளின் எண்ணிக்கை தொடர்பாக கூறுகின்றார்கள்.

இந்த விஷயங்கள் எப்படிப்பட்டவை என்றால், இது தஹ்ரீகே ஜதீது மற்றும் வக்ஃபே ஜதீது தொடர்பான குத்பாக்களை ஈமானுக்கு வலுவூட்டக் கூடியதாகவும் சுவாரஸ்யமானதாகவும் ஆக்கி விடுகின்றது.

இவ்வருடம் ஹுஸூர் அவர்கள் கேமரூன், கேம்பியா, பெனீன், இந்தியா, தன்ஸானியா, ரஷ்யா, மாலி, போர்கினோஃபாஸோ, ஜெர்மனி, ஐவெரிகோஸ்ட், இந்தோனேஷியா, U.K, புரோண்டி, கனடா, கோன்கோபராஸில் மற்றும் பாகிஸ்தான் நாடுகளைச் சார்ந்தவர்கள் செய்த பொருள் தியாகம் தொடர்பான ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்களை எடுத்துக் கூறினார்கள்.

ஹுஸூர் அவர்கள் 9 நவம்பர் 2018 அன்று தஹ்ரீகே ஜதீதின் 85–வது ஆண்டிற்கான அறிவிப்பைச் செய்தார்கள். மேலும் 84–வது ஆண்டின் அதாவது 2017–ஆம் ஆண்டு செய்யப்பட்ட ஒட்டுமொத்த பொருள் தியாத்தைப் பற்றி அறிவுப்பு செய்தவாறு, **அல்லாஹ் கலப்பற்ற தன்மை கொண்டவர்களுக்கு** ஒரு கோடியே 27 இலட்சத்து 93 ஆயிரம் **பவுண்டு தியகாம் செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்கியுள்ளான். அல்ஹம்துலில்லாஹ்** என்று குறிப்பிட்டார்கள்.

ஒட்டுமொத்த வசூலின் அதிகமாக பொருள் தியாகம் செய்த ஜமாஅத்துகளில் (1)பாகிஸ்தான் (2) ஜெர்மனி (3) பிரிட்டன் (4) அமெரிக்கா (5) கனடா (6) இந்தியாக (7) ஆஸ்திரேலியா (8) மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்று (9) இந்தோனேஷியா (10)கானா (11)மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்று முறையே இடம் பெற்றுள்ளன.

மாநிலங்களின் அடிப்படையில் தியாகத்தில் முன்னிலையிலுள்ள இந்தியாவின் ஜமாஅத்துகள். (1) கேரளா (2) கர்நாடகா (3) தமிழ்நாடு (4) தெலுங்கானா (5) ஜம்மு காஷ்மீர் (6) ஒடிசா (7) பஞ்சாப் (8)வங்காளம் (9) தில்லி (10) மஹாராஷ்டிரா.

தியாகம் செய்த ஜமாஅத்துகளின் அடிப்படையில் இந்தியாவின் முதல் பத்து பெரிய ஜமாஅத்துகள். (1) காதியான் (பஞ்சாப்) (2)ஹைதராபாத் (தெலுங்கானா) (3) பத்தபிரியம் (கேரளா) (4)சென்னை (தமிழ்நாடு) (5) கோழிக்கோடு (கேரளா) (6) பெங்களூர் (கர்நாடகா) (7) கல்கத்தா (வங்காளம்) (8) பயங்காடி (கேரளா) (9)கன்னூர் டவுன் (கேரளா) (10) யாதுகீர் (கர்நாடகா).

தனி நபர் விகிதாச்சாரத்தின் படி அதிகமாக சந்தா செலுத்திய ஜமாஅத்துகள் (1) சுவிட்சர்லாந்து (2) அமெரிக்கா (3) யூ.கே. (4)ஆஸ்திரேலியால (5) சிங்கப்பூர் (6) சுவீடன் (7) பெல்ஜியம் (8) ஜெர்மனி (9) கனடா (10)பின்லாந்து முறையே உள்ளன.

நான் இங்கு இவ்விஷயத்தை குறிப்பிட விரும்புவேன். அதாவது 2017–ஆம் ஆண்டு முழு இந்தியாவின் ஜமாஅத்துகளில் காதியான் முதல் இடத்தைப் பெற்றுள்ளது. இதற்காக நாம் மகிழ்ச்சியடைகின்றோம். 2016–ஆம் ஆண்டு காதியான் ஐந்தாம் இடத்தையும், 2017–ஆம் ஆண்டு மூன்றாம் இடத்தையும், 2018–ஆம் ஆண்டு முதல் இடத்தையும் காதியான் பெற்றுள்ளது. அல்ஹம்துலில்லாஹ்.

நாங்கள் எதிர்பார்த்திராக நிலையில் முதல் இடத்தை காதியான் பெற்றுள்ளது என்று ஹுஸூர் அவர்கள் கூறியது எங்களை மற்றற்ற மகிழ்ச்சியில் ஆழ்த்தி விட்டது. அந்த மகிழ்ச்சிக்கு ஒரு எல்லையே இருக்கவில்லை. காதியான் இரண்டு வருடத்திற்குள் ஐந்தாவது இடத்திலிருந்து முதல் இடத்திற்கு வந்தது, அனைத்து காதியான் வாசிகளுக்கும் வாழ்த்துக்கூடிய ஒன்றாகும். இந்த இடத்தை எப்போதும் தக்க வைத்துருக் கொள்வது காதியானில் வசிக்கக் கூடியர்கள் மீது மிகப்பெரும் பொறுப்பாக உள்ளது.

## காதியானில் 124 -வது ஆண்டு மாநாடு

**ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் காதியானில் நடைபெறும் 124 –வது ஆண்டு மாநாடு 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28, 29, 30 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்கள்.**

**ஜமாஅத் சகோதரர்கள் இப்போதிருந்தே துஆக்களுடன் இந்த அருளுக்குரிய ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்கு ஆயத்தம் ஆகுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த ஆன்மீக மாநாட்டில் கலந்து கொண்டு அதன் அருள்களிலிருந்து பலன் பெறுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!**

**இந்த ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றி பெறுவதற்கும், அருளுக்குரியதாக இருப்பதற்கும், நல்ல ஆன்மாக்கள் நேர்வழி பெறுவதற்குக் காரணமாக அமைவதற்கும் துஆக்கள் செய்து வாருங்கள். ஜஸாகுமுல்லாஹ் அஹ்ஸனல் ஜஸா.**

**(நாஸிர் இஸ்லாஹோ இர்ஷாது மர்கஸிய்யா, காதியான்)**

இந்தியாவிலுள்ள மாநிலங்களின் ஜமாத்துகளின் கடந்த 6 ஆண்டு அறிக்கை உங்கள் முன் சமர்ப்பிக்கப்படுகின்றது. இதன் மூலம் ஜமாஅத்துகள் தத்தமது ஜமாஅத்துகளை இந்த பொருளாதார தியாகத்தில் முன்னேற்றம் அடையச் செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

**கடந்த ஆறு ஆண்டுகளில் முதல் பத்து இடங்களைப் பெற்ற ஜமாஅத்துகளின் தரவரிசைப் பட்டியல்**

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2018 | காதியான் | ஹைதராபாத் | பத்தபிரியம் | சென்னை | கோழிக்கோடு | பெங்களூர் | கல்கத்தா | பயங்காடி | கண்ணூர் | யாதுகீர் |
| 2017 | கோழிக்கோடு | பத்தபிரியம் | காதியான் | ஹைதராபாத் | கல்கத்தா | பெங்களூர் | கண்ணூர் | பயங்காடி | மாத்தோட்டம் | கருலாயி |
| 2016 | கருலாயி | கோழிக்கோடு | ஹைதராபாத் | பத்தபிரியம் | காதியான் | கண்ணூர் | பயங்காடி | தில்லி | கல்கத்தா | சூலூர் |
| 2015 | கருலாயி | ஹைதராபாத் | கோழிக்கோடு | காதியான் | பத்தபிரியம் | கண்ணூர் | பயங்காடி | கல்கத்தா | பெங்களூர் | சூலூர் |
| 2014 | கருலாயி | கோழிக்கோடு | ஹைதராபாத் | காதியான் | கண்ணூர் | பயங்காடி | சூலூர் | கல்கத்தா | சென்னை | பெங்களூர் |
| 2013 | கருலாயி | கோழிக்கோடு | ஹைதராபாத் | கண்ணூர் | பயங்காடி | காதியான் | கல்கத்தா | யாதுகீர் | சென்னை | மாத்தோட்டம் |

**கடந்த ஆறு ஆண்டுகளில் முதல் பத்து இடங்களைப் பெற்ற மாநிலங்களின் தரவரிசைப் பட்டியல்**

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2018 | கேரளா | கர்நாடகா | தமிழ்நாடு | தெலுங்கானா | J&K | ஒடிசா | பஞ்சாப் | Bengal | தில்லி | மஹாராஷ்டிரா |
| 2017 | கேரளா | கர்நாடகா | J&K | தெலுங்கானா | தமிழ்நாடு | ஒடிசா | பஞ்சாப் | Bengal | தில்லி | மஹாராஷ்டிரா |
| 2016 | கேரளா | கர்நாடகா | A.P | தமிழ்நாடு | J&K | ஒடிசா | பஞ்சாப் | Bengal | தில்லி | மஹாராஷ்டிரா |
| 2015 | கேரளா | தமிழ்நாடு | கர்நாடகா | A.P | J&K | ஒடிசா | பஞ்சாப் | Bengal | தில்லி | மஹாராஷ்டிரா |
| 2014 | கேரளா | தமிழ்நாடு | கர்நாடகா | A.P | J&K | ஒடிசா | Bengal | பஞ்சாப் | தில்லி | லக்ஷதீப் |
| 2013 | கேரளா | A.P | J&K | கர்நாடகா | Bengal | ஒடிசா | பஞ்சாப் | U.P | மஹாராஷ்டிரா | தில்லி |

ஹைதராபாத் கடந்த ஆண்டு நான்காம் இடத்தைப் பெற்றிருந்தது. ஆனால் இந்த வருடம் இரண்டாம் இடத்திற்கு முன்னேறியுள்ளது. அவ்வகையில் ஹைதராபாத் வாசிகளும் வாழ்த்துக்குரியவர்களே!

அவ்வாறே சென்னை 2013–2014 ஆம் ஆண்டுகளில் 9 வது இடத்தில் இருந்தது. அதற்குப் பிறகு மூன்று ஆண்டுகள் முதல் பத்து இடங்களில் அதன் பெயர் இடம்பெறவில்லை. ஆனால் 2018–ஆம் ஆண்டு திடீரென அது நான்காவது இடத்திற்கு வந்தது நிச்சயமாக ஆச்சரியத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கின்றது. இவ்வகையில் சென்னையும் போற்றப்படுவதற்கு தகுதிவாய்ந்ததாக இருக்கின்றது.

இதற்குப் பிறகு மாநிலத்தைப் பற்றி குறிப்பிட வேண்டுமென்றால், கேரளா ஜமாஅத்திற்கு இக்கட்டான நிலைமைகள் இருந்தபோதும் தமது முதல் இடத்தை அது தக்கவைத்துள்ளது. அங்குள்ள பெரும்பாலான அஹ்மதிகள் வெள்ளத்தின் சேதத்தினால் பெரும் இழப்பை சந்தித்தனர். அல்லாஹ் அவர்களுக்கு ஏற்பட்ட சேதத்தை சரி செய்வானாக. அவர்களது செல்வத்தில் முன்பைவிட அதிகமாக அபிவிருத்தியை ஏற்படுத்துவானாக.

தமிழ்நாடு கடந்த ஆண்டு 5–வது இடத்தில் இருந்தது. தற்போது 3–வது இடத்தைப் பெற்றுள்ளது. இவ்வகையில் தமிழ்நாடும் வாழ்த்துக்குரியதே! 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டில் தமிழ்நாடு 2–வது இடத்தையும், 2016–ல் 4–வது இடத்தையும், 2017–ல் 5–வது இடத்தையும் பெற்றுள்ளது. காஷ்மீர் 3–வது இடத்திலிருந்து 5–வது இடத்திற்கு சென்று விட்டது. அவ்வாறே கர்நாடகாவும் கடந்த மூன்று ஆண்டுகளாக 3–வது இடத்தை தக்க வைத்துள்ளது.

இறுதியாக நாம் இந்திய அஹ்மதிய்யா ஜமாஅத்துகளிடம் கேட்டுக் கொள்வது என்னவென்றால், உங்களது புதிய ஆண்டிற்கான வாக்குறுதியை கடந்த ஆண்டை விட பத்து சதவிகிதம் அதிகப்படுத்தி எழுதவும். எவ்வளவு அதிகமாக எழுதினாலும் அது நிச்சயமாக நற்கூலிக்கு காரணியாகவே அமையும். கலப்பற்ற முறையில் செய்யப்படுகின்ற தியாகங்களை அல்லாஹ் ஒருபோதும் வீணாக்குதில்லை. அதற்குப் பகரமாக அல்லாஹ் உலகத்திலும் வழங்குவான். மறுமையிலும் அதற்கான பிரதிபலன் கிடைக்கும்.

ஹுஸூர் அவர்கள் தனி நபர் விகிதாச்சாரத்தின்படி சந்தா செலுத்தியவர்களின் குறிப்பை எடுத்துக் கூறியிருந்தார்கள். அதில் இந்தியா இடம் பெறவில்லை. இதில் இந்தியாவின் பெயரும் முதல் பத்து நாடுகளில் வர நாம் முயற்சி செய்ய வேண்டும். நாம் உண்மையிலேயே நமது சந்தாவின் தரத்தை அதிகரிக்கும்போதுதான் அது சாத்தியமாகும். எனவே நாம் இதற்காக கவலைப்பட வேண்டும். முழு உலகிலுமுள்ள ஜமாஅத்துகளில் இந்தியா பல ஆண்டுகளாக ஒரே இடத்தில் இருக்கின்றது. இப்போது நாம் நமது சந்தாவை அதிகப்படுத்தியவாறு இதனை முன்னே எடுத்துச் செல்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். நம்மால் அவ்வாறு செய்யவும் முடியும்.

அல்லாஹ் நம் அனைவருக்கும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பிறந்த நாட்டை முன்னேற்றத்தின் அனைத்து களங்களிலும் மேலோங்கி நிற்பதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. ஆமீன். **(மன்ஸூர் அஹ்மது மஸ்ரூர்)**

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறுகின்றார்கள்:

அல்லாஹ் தனக்காக தியாகம் செய்பவர்களுக்கு அருள் செய்கின்றான்.... ஆனால் எவரையும் பொருள் தியாகம் செய்வதிலிருந்து தடுக்கக் கூடியவர்கள் சிந்திக்க வேண்டும். செல்வத்தை வழங்குவதும் இறைவன் ஆவான். அவனால் நன்றிகேடு காட்டக் கூடியவர்களிடமிருந்து அதை பறிக்கவும் முடியும். இதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். எனவே எவர்களுடைய உள்ளத்தில் இது போன்ற சிந்தனைகள் எழுகின்றதோ அவர்கள் அதிகமாக பாவமன்னிப்பு கோர வேண்டும். (குத்பா ஜுமுஆ 11.11.2016)

EDITOR
O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 13 December 2018 Issue No. 50

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

புரியவில்லை. மேலும் இஸ்லாம் பிற வகுப்பினரால் இழைக்கப்பட்ட அநியாயங்கள் மீது மிகுதியான அளவில் பொறுமையைக் கடைபிடித்து வந்திருக்கின்றது. இதன் முன்மாதிரியை பிற சமுதாயத்தார்களிடம் நம்மால் காணவே முடியாது. இவ்வாறிருக்க இந்த ஈஸா மஸீஹூம் மஹ்தி சாஹிபும் வந்ததுமே மக்களை எவ்வாறு கொன்று குவிக்கக்கூடியவராக இருப்பார்? மேலும் அவர்கள் வந்ததுமே வேதம் அளிக்கப்பட்டவர்களிடமிருந்து ஜிஸ்யா என்னும் வரியை ஏற்றுக் கொள்ள மாட்டார்களாம்.

மேலும் حَتّٰى يُعْطُوا الْجِزْيَةَ عَنْ يَّدٍ وَّهُمْ صٰغِرُوْنَ அதாவது அவர்கள் தங்கள் விருப்பத்துடன் ஜிஸ்யா (கப்பம்) கட்டி உங்களுக்குப் பணிந்து விடும்வரை போர் புரியுங்கள். **(9:29)**

அதாவது பணிந்து விட்டால் போரை நிறுத்தி விடுங்கள். என்ற திருவசனத்தையும் இவர்கள் ரத்து செய்து விடுவார்களா? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது காலத்தில் கூட ரத்து செய்யப்படாத திருக்குர்ஆனின் இவ்வசனங்களை, வந்ததுமே ரத்து செய்யும் ஈஸா மஸீஹ் (மஹ்தியாகிய) இவர்கள் இஸ்லாம் மார்க்கத்திற்கு எவ்வாறு துணை புரியக் கூடியவர்களாக ஆக முடியும்? இவர்கள் செய்யும் இப்பெரும் புரட்சியால் கத்மே நுபுவ்வத்திற்கு எவ்வித பாதிப்பும் உண்டாகாதாம்.

நுவுவ்வத்தின் காலம் கடந்து 1300 ஆண்டுகள் ஆகிவிட்ட இக்காலத்தில் இஸ்லாத்திற்குள்ளேயே 73 பிரிவுகள் உண்டாகியிருக்கையில் உண்மையான மஸீஹ் வந்து செய்ய வேண்டிய வேலை வாளைக் கொண்டு அல்லாமல் ஆதாரங்களைக் கொண்டு உள்ளங்கள் வெல்ல வேண்டியதாகும். மேலும் வெள்ளி, தங்கம், பித்தளை, மரம் இவைகளைக் கொண்டு உருவாக்கப்படும் சிலுவைகளை உடைத்துக் கொண்டு திரிவதற்குப் பதிலாக அச்சிலுவைகளின் மீதுள்ள கொள்கைகளை, சரியான உண்மையான ஆதாரங்களைக் கொண்டு உடைப்பதுமேயாகும்.

**(கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 73–75)**

☆ அடிக்குறிப்பு 1 :– பலவந்தமாக முஸ்லிம்களாக்க வேண்டும் என்பது அரபிகளுக்கும் கட்டளை இருந்தது என்று நீங்கள் சொல்வீர்களானால் அது திருக்குர்ஆனிலிருந்து ஒருபோதும் நிரூபணமாகவில்லை. மாறாக,. முழு அரபு நாடும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களக்கு கொடிய துன்பங்களைக் கொடுத்து வந்தது. சஹாபாக்களில் ஏராளமான ஆண்களும் பெண்களும் கொலை செய்யப்பட்டனர். வாளின் தாக்குதல்களிலிருந்து தப்பியவர்கள் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டார்கள்.

இதனால் கொலைக் குற்றத்திற்குரியவர்களும் அல்லது அக்குற்றத்திற்கு துணையாக இருந்த அனைவரும் இறைவனது பார்வையில் அவர்கள் செய்த கொலைக்குப் பதிலாக அவர்களே கொலைத் தண்டனைக்குத் தகுதியுள்ளவர்களாக இருந்தனர். பழிக்குப்பழி என்ற நிலையில் அவர்களுக்குச் சரியான தீர்ப்பு அவர்களை கொலை செய்வதேயாகும். ஆனால் அவர்களில் யாரேனும் முஸ்லிம்களாகி விட்டால் அவரது சென்று போன குற்றத்திற்காக அவர் மரண தண்டனைக்குத் தகுதியுள்ளவராக இருந்தாலும் அவர் மன்னிக்கப்படுவார் எனக் கருணை காட்டுபவர்களில் மிகச்சிறந்த கருணை காட்டுபவனாகிய இறைவனிடமிருந்து இந்த சலுகை வழங்கப்பட்டது. இது திருக்குர்ஆனிலிருந்து நிரூபணமாகிறது. ஆகவே கருணை என்ற இந்நிலை எங்கே? பலவந்தம் எங்கே? – நூலாசிரியர்.

அடிக்குறிப்பு 2:– இவர் ஆங்கிலேயர் ஆளும் நாட்டில் இருந்து வருவதால் ஜிஹாது என்னும் புனிதப் போர் செய்வதைத் தடை செய்கிறார் என்று மனார் என்னும் பத்திரிகையின் ஆசிரியர் ஆட்சேபனை செய்தது போல் சில அறிவீனர்கள் என்மீது ஆட்சேபனை செய்கிறார்கள். நான் பொய்யாக இந்த அரசை திருப்தி செய்யக் கூடியவனாக இருந்தால் ஈஸப்னு மர்யம் சிலுவையிலிருந்து இரட்சிப்புப் பெற்று காஷ்மீரிலுள்ள ஸ்ரீ நகரில் இயற்கையாக மரணம் அடைந்தார் என்றும் அவர் தேவனும் அல்லர்; தேவ குமாரனும் அல்லர் எனத் திரும்பத் திரும்ப ஏன் கூற வேண்டும்? என்பதை இந்த அறிவீனர்கள் அறிய மறுக்கிறார்கள். மார்க்கத்தில் ஆவேசமாக இருக்கின்ற ஆங்கிலேயர்கள் எனது இக்கூற்றைக் கண்டு என்னை வெறுக்க மாட்டார்களா?

ஆகவே கேளுங்கள்! அறிவீனர்களே! நான் இந்த அரசை ஒன்றும் புகழவில்லை. இதில் உண்மையென்னவென்றால் இஸ்லாம் மார்க்கத்திலும் அதன் பழக்க வழக்கங்களிலும் அது சிறிதளவும் தலையிடுவதில்லை. அது தனது சொந்த மதத்தை முன்னேறச் செய்வதற்காக நம்மீது ஆயுதங்களை பிரயோகிப்பதில்லை. அது மார்க்கத்திற்காக எவ்வித போரும் புரியாததனால் திருக்குர்ஆனின் கூற்றுப்படி நாம் இவ்வாறான அரசோடு போர் புரிவதென்பது விலக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் இந்த அரசும் எந்த மார்க்கப் போரும் செய்வதில்லை. மேலும் அவர்களது நாட்டில் நாம் நமது பணிகளைத் தடையின்றி செய்து வருவது போல் மக்காவிலும் மதீனாவிலும் நாம் செய்ய முடியாது. ஆகவே நாம் அவர்களுக்கு நன்றி செலுத்த வேண்டியது அவசியமேயாகும். என்னை இந்நாட்டில் படைத்திருப்பது இறைவன் புறமிருந்துள்ள ஒரு ஞானமாக இருந்தது. ஆகவே நான் இறைவனது ஞானத்தை அவமதிக்க வேண்டுமா?

وَاٰوَيْنٰهُمَآ اِلٰى رَبْوَةٍ ذَاتِ قَرَارٍ وَّمَعِيْنٍ (23:51) என்னும் இந்த வசனத்தின் மூலம் அல்லாஹ் நமக்கு புரிய வைப்பதாவது, சிலுவை சம்பவத்திற்குப் பின்னர் நாம் ஈஸா மஸீஹை சிலுவையின் ஆபத்திலிருந்து பாதுகாத்து அவரையும் அவரது தாயாரையும் நீரூற்றுகள் நிரம்பிய உயர்ந்ததொரு குன்றின் மீது அடைக்கலம் அளித்தோம். அது தங்குவதற்கேற்ற வசதியான ஒரு இடமாகும். அதாவது இங்கு கூறப்பட்டுள்ள இடம் இயற்கை வளம் நிரம்பிய காஷ்மீரிலுள்ள ஸ்ரீநகராகும்.

இவ்வாறு எனக்கு இறைவன் குழப்பக்காரர்களின் கரங்கள் எட்ட முடியாத இந்த அரசாகிய இவ்வுயர்ந்த குன்றின் மீது இடம் அளித்துள்ளான். அது தங்குவதற்கேற்ற வசதியான ஓர் இடமாகும். இந்நாட்டில் உண்மையான ஞானங்களின் ஊற்றுகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. மேலும் குழப்பக்காரர்களின் தாக்குதல்களிலிருந்து நமக்குச் சாந்தியும் அடைக்கலமும் கிடைத்து வருகிறது. இப்படியிருக்கும் போது நாம் இந்த அரசின் நன்மைகளுக்கெல்லாம் நன்றி செலுத்த வேண்டியது நமது கடமையில்லையா – நூலாசிரியர்.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad